பதிவு எண் M. 4900. 16 பக்கங்கள்.

# குடி அரசு

நிறுவியது: 1924.

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 4-6-1949 சனிக்கிழமை } மலர் 39.

# பார்ப்பனத் தந்திரம்!

## காக்கையும் குருவியும்.

★

குருவி:-ஓ காக்கையே! நீ எவ்வளவுதான் கஷ்டப்பட்டாலும், பார்ப்பனர்களை ஜெயித்துவிடலாம் என்றோ, அல்லது அவர்களுடைய புரட்டுகளை வெளியாக்கிவிடலாம் என்றோ நினைப்பாயேயானால், அது அவ்வளவும் பகற்கனவுதான். காரியத்தில் சுலபத்தில் முடியும் காரியம் அல்ல. அடியோடு தடியடியாய் அடித்தால் அதுவும் ஒரு சமயம் முடியும்.

காக்கை:-என்ன குருவியே! நீ இப்படிச் சொல்லுகின்றாய்? பார்ப்பான் சங்கதி எடுத்ததெல்லாம் புரட்டாயிருக்கின்றது. அவன் சொல்வதெல்லாம் புளுகாயிருக்கின்றது. இதை வெளிப்படுத்த முடியாது என்கின்றாயே உனக்கு என்ன அவனிடத்தில் அவ்வளவு பயம்?

குருவி:-எனக்குப் பயம் ஒன்றுமில்லை, நீபார்ப்பனத் தந்திரத்தை சரியாய் உணரவில்லை. தெரிந்திருந்தால் இவ்வளவு லேசாக அவனை மதித்திருக்கமாட்டாய்.

காக்கை:-சரி நீ உணர்ந்த விஷயத்தைத் தான் சொல்லு பார்ப்போம்.

குருவி:-சொல்லட்டுமா?

காக்கை:-சொல்லு சொல்லு.

குருவி:-முதலாவது பார்ப்பான் எந்த விஷயத்தைச் சொல்ல வந்தாலும் 'அது உன் கண்ணுக்கும் மனதிற்கும், அறிவுக்கும் எட்டாதது' என்று சொல்லிவிடுவான். இரண்டாவது இந்த லோகத்தில் பிரத்தியட்சத்தில் கண்டுபிடிக்கக் கூடியதாகவோ, இப்போது நடந்ததாகவோ எந்த விஷயத்தையும் அவன் சொல்லிச் சிக்கிக்கொள்ளாமல், அவன் எது சொன்னாலும் மேல் ஏழு லோகத்தில் உண்டு என்றும், கீழ் ஏழு லோகத்தில் உண்டு என்றும்தான் சொல்லுவான். 'கண்




ணுக்குத் தெரியாத சூட்சம சரீரத்தோடு இருக்கின்றார்கள்' என்றுதான் சொல்லுவான்.

'போன யுகத்தில் நடந்தது, அதற்கு முந்தின யுகத்தில் நடந்தது, பிரளய காலத்தில் நடந்தது' என்றுதான் சொல்லுவான். 'அசரீரியாய்ச் சொல்லிற்று, மாயாரூபியாய் இருந்தது' என்றுதான் சொல்லுவான். நம்பினால்தான் உண்டு. நம்பாவிட்டால் பாவம்' என்று சொல்லுவான். இவைகளில் நீ எதைக் கண்டுபிடித்து பார்ப்பானைப் பொய்யன் என்று சொல்லிவிடமுடியும்? சொல்லு பார்ப்போம்.

காக்கை:-நீ சொல்லுவது ஒரு விதத்தில் வாஸ்தவம்தான். அதனாலேயே எல்லாம் பொய் என்று சொல்லிவிட முடியுமா?

குருவி:-அதுதான் நானும் சொல்லுகின்றேன். அதாவது பார்ப்பான் சொல்லுவதில் ஒன்றைக் கூட நீ பொய்யென்று ருஜுப்படுத்த முடியாது?

உதாரணமாக, இந்த உலகம் எத்தனையோ யோசனை தூரம் விஸ்திரணம் என்கின்றான். நீ எப்படி அளந்து பார்த்து தப்பு என்று சொல்ல முடியும்? எத்தனையோ மனுக்கள், பிர்மாக்கள், விஷ்ணுக்கள், சிவன்கள் பிறந்து இறந்தாய் விட்டது. ஒவ்வொருவருக்கு எத்தனையோ யுகங்கள் ஆயுள் என்று சொல்லுகின்றான். அதில் ஒரு வினாடி கம்மியென்று உன்னால் சொல்ல முடியுமா?

'எத்தனையோ சிரஞ்சிவிகள் இருக்கிறார்கள், ஆனால் ஒருவரும் உன் கண்ணுக்குத் தென்படமாட்டார்கள்' என்கின்றான். இவற்றுள் ஒரு சிரஞ்சீவியாவது இல்லை என்று உன்னால் சொல்லமுடியுமா?

நீ இறந்து முன் இத்தனை ஆயிரம் ஜன்மம் எடுத்தாய் விட்டது. ஆனால் அது உனக்கு இப்போது தெரியாது என்று சொல்லுகிறான். அதை நீ இல்லை இல்லை என்று சொல்லமுடியாது.

'நீ எங்களுக்குக் கொடுக்கும் சிரார்த்தம் முதலியவைகளை உனது பிதுர்க்கள் சூக்ஷும சரீரத்துடன் வந்து பெற்றுப் போகின்றார்கள். ஆனால் அது உன் கண்ணுக்குத் தெரியாது' என்கிறான். நீ அவற்றுள் ஒரு கடுகளவாவது போய்ச் சேரவில்லை என்று சொல்லி அவனிடம் தப்பித்துக்

(தொடர்ச்சி 16-ம் பக்கம்)

# காலமும் - கல்வியும்.

★

காலமும் கல்வியும்! ஆம்! காலத்திற்கு ஏற்ற கல்வி அமைப்பு வேண்டும். அதுதான் அறிவுடைய நாட்டுக்கு அழகு—அதைத்தான் அறிவு வளர்ச்சி—நாகரீக முன்னேற்றம் என்று நவில்வர்.

மரப் பொந்துகளிலும், குகைகளிலும் வாசம் செய்த மனிதன் காலத்தின் போக்கில் அறிவு வளர வளர தன்னுடைய பழக்க வழக்கங்களையும் மாற்றிக்கொண்டே வந்தான். கட்டை வண்டியில் பிரயாணம் செய்த மனிதன், இன்று காற்று வேகத்தில் செல்லும் ஆகாய விமானத்தில் பறக்க ஆரம்பித்துவிட்டான். மரப் பொந்துகளிலும் குகைகளிலும் வாழ்ந்தவன் இன்று வானளாவிய மாட மாளிகைகளில் வாழலானான். எழுத்தாணி கொண்டு ஏட்டில் எழுதிய காலம் போய் இன்று அச்சுப்பொறிகொண்டு அறிவை வளர்க்க ஆரம்பித்துவிட்டான். இதைத்தான் 'காலமும் கல்வியும்' என்று கூறுகிறேன்.

காலத்தை ஒட்டி மனிதன் தன் வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்வதுதான் சிறந்த வழி. அதுதான் இயற்கை. அதேபோல் காலத்திற்கு எற்பக் கல்வியும் அமைதல்வேண்டும். புதியன புகுதலும் பழையன கழிதலும் என்பது போல, காலத்திற்கு எற்பக் கல்வித் திட்டமும் அமைதல் அத்தியாவசியமானது. அதுவும் நம் நாட்டுக்கு மிகமிக அவசியம், அவசரமும்கூட.

பல்லாண்டுகள் அடக்கி ஒடுக்கப்பட்டு, உடைமைகளைப்பறிகொடுத்து இறுதியில், இப்பொழுதுவிடுதலைபெற்றுள்ளது நம்நாடு. 120 ஆண்டுகளுக்கு மேல் அந்நிய ஆட்சியில் அல்லற்பட்டு, விடுதலை அடைந்த நம் நாட்டிற்கு மிக மிகத் தேவையானது கல்வித் திட்டம்.

ஆம்! அடிமை விலங்கை அறுத்தெறிந்த நாடு ஒவ்வொன்றும், நாட்டில் நல்லாட்சி ஏற்படவேண்டுமானால் நாட்டு மக்களிடம் பகுத்தறிவு பரவவேண்டும்—படிப்பு வளரவேண்டும் என்றே பாடுபட்டிருக்கிறது. அதே போல் நம் நாட்டிலும் படிப்புப்பரவ வேண்டி இருக்கிறது பாமர மக்களிடையே. இங்கு படித்தவர் சிலர், படியாதவர் பலர். மேல் நாடுகளில் படித்தவர் பலர். படியாதவர் சிலர். முன்னுக்குப் பின் முரணான செய்தி.

இந்த கல்விக்காக ஒரு மாணவனுக்கு அரசாங்கம் செலவழிப்பது 8¼-அணா. அய்ரோப்பிய நாடுகளில் ஒரு மாணவனுக்காக அரசாங்கம் செலவழிப்பது 33 ரூபாய். மேல் நாட்டிற்கும் நம் நாட்டிற்கும் கல்வி சம்பந்தமாக உள்ள வித்தியாசம் மலைக்கும் மடுவுக்கும் உள்ளதைப்போல் இருக்கிறது. மக்களிடம் கல்வி வளர்ச்சி ஏற்பட்டால் அடிமை வாழ்வில் விருப்பங்கொள்ளார் விடுதலையை விரும்புபவர். இன்ப வாழ்வுக்கு இச்சைப்படுபவர். ஆகவேதான் அந்நிய ஆட்சியில் மக்களிடம் அறிவுச் சூன்யம் ஏற்பட்டது.

அறியாமையைப் போக்கி, அறிவை வளர்ப்பது கல்வி. மாக்களிலிருந்து மக்களை வேறுபடுத்திக் காட்டுவது கல்வி. இத்தகைய கல்வியை நம் நாட்டு மக்களிடம் நடமாடும்படி செய்ய வேண்டியது படித்த ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

தற்காலக் கல்வித் திட்டம் செல்வம் நிறைந்த சீமான்களுக்கே உரியதாய் இருக்கிறதேயொழிய ஏழைத் தொழிலாளி, விவசாயி, பாமர மக்களுக்கு உரிய முறையாய்க் கல்வித் திட்டம் அமையவில்லை.

செல்வம் உள்ள சீமான்களின் குழந்தைகள் உல்லாசப் பொழுது போக்குக்கு கல்லூரிக்கு வருவதாக நினைத்துவருகிறார்களே யொழிய கருத்தூன்றிப் படிக்கவேண்டும் என்ற கவலை அவர்களுக்குக் கிஞ்சித்தும் கிடையாது. உண்மையிலேயே 100க்கு 90-மாணவர்களுக்குதங்களின் அறிவை வளர்த்துக்கொள்ள, அறியாமையைப் போக்கிக்கொள்ள வருகிறோம் என்கிற எண்ணமே இல்லை.

ஆகவே, அந்த மாணவர்கள் ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டு வருடம், சில சமயங்களில் மூன்று வருடங்கூட இருக்க நேரிட்டு விடுகிறது. அவர்களுக்கு மூன்று வருடமல்ல முப்பது வருடம் வேண்டுமானாலும் இருந்து படிக்கப் போதிய பொருள் கையில் இருக்கிறது.

ஆனால் 100க்கு 90க்கு மேற்பட்ட ஏழை மாணவர்கள் அவ்வளவு பணம் செலவழித்துப் படிக்க முடிவதில்லை. ஆகவே மேல்படிப்புக்கு வரமுடியாத காரணத்தால் பட்டப்படிப்பை விரும்புவதும் இல்லை. அப்படி ஓரிரண்டு மாணவர்கள் படித்துப் பட்டம் பெற்று வந்தாலும் வேலை இல்லாத் திண்டாட்டம் அவர்களைத் திணரவைத்து விடுகிறது.

எனவே நாட்டுக்கு ஏற்ற முறையில், நாட்டு மக்களின் நலனைப் பேணக் கூடிய விதத்தில் கல்வித்திட்டம் அமைதல் அவசியமானது.

வேலைக்கு மனுச் செய்தால், அம் மாணவனுக்கு வேலை கிடைப்பது அவனுடைய 'சிபார்சு'களைப் பொறுத்திருக்கிறது. ஒரு மாணவன் எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும் அவனுக்குப் பணக்காரரின் தயவும், பட்டம் பெற்றோரின் பாராட்டும் இல்லாவிட்டால், அவனால் வேலையில் அமர முடியாத நிலையிருக்கிறது இன்று. இனத்தை இனம் நாடும் என்பது போலப் பணக்காரருக்குப் பணக்காரர்கள் தான் 'சிபார்சு' செய்வார்களே ஒழிய, ஏழை எளிய மாணவன் எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும் அவனுக்குப்பாராட்டும்கிடைக்காது அவன் பசியும் தீராது. மேலும்இன்று எத்தகைய சாதாரண உத்தியோகமாய் இருந்தாலும் பட்டம் பெற்றவர்கள் தான் வகிக்க முடியும் என்ற எண்ணம் ஏற்பட்டு விட்டது போல்இருக்கிறது. உதாரணமாக, ஒரு குமாஸ்தா வேலைக்கோ, கிளார்க்வேலைக்கோ, அல்லது சப் இன்ஸ்பெக்டர் வேலைக்கோ பி.ஏ., எம். ஏ. படிப்பு தேவை இல்லை. ஆனால்... இன்று நாம், நாட்டில் காண்பது என்ன? எப்பக்கம் திரும்பினாலும் பி. ஏ., எம். ஏ. பட்டதாரிகள் தான். பி. ஏ., எம். ஏ. பட்டங்களைக் குறை கூறுவதாக யாரும் எண்ணிவிட வேண்டாம்.

இந்த நிலையில் ஏழை முதன் மகன் முனுசாமி எஸ். எஸ். எல். சி. யுடன் படிப்பை முடித்துக் கொள்கிறான். முத்தனால் முனுசாமியை அவ்வளவு தூரந்தான் படிக்க வைக்க முடிந்தது. அந்தப் படிப்புக்கே முத்தன் மூன்று வேளை உணவு உண்டிருக்க முடியாது.

ஆபீசில் காலியாக இருக்கும் கிளார்க்கு வேலைக்கு மனுப்போடுகிறான் முனுசாமி. அனந்தனும் 'அப்ளிக்கேஷன்' எழுதுகிறான். அனந்தன் பி. ஏ. படித்தவன். வேலை யாருக்குக் கிடைக்கும்? அனந்தன் கிளார்க் வேலைக்குத் தகுதியானவன் என்று எண்ணுகின்றனர் போலும். ஆனால் அதே சமயத்தில் கிளார்க்கு வேலைக்குப் பி. ஏ. படிப்புத் தேவையா? கிளார்க்கு வேலைக்கு பி. ஏ. படிப்புத் தேவையானால் மற்ற வேலைகளுக்கு எவ்வளவு படிக்க வேண்டும்? என்பன போன்றவற்றை எண்ணிப் பார்ப்பதும் இல்லை. இந்த நிலையில் படிப்பு இருந்தால் ஏழை மாணவன் கதி என்ன ஆவது?

ஆகவே... இன்ன தொழிலுக்கு இவ்வளவு படித்தால் போதும் என்று இருக்கவேண்டும்.

நிற்க, ஒரு மாணவன் அய்ந்து வயதில் பள்ளிக்குச் சென்று ஒரு வருடங்

(தொடர்ச்சி 15-ம் பக்கம்)

20 ஆண்டுகளுக்குமுன் பெரியார்.

# மெட்டிரியலிஸம்.

★

## ஒழுக்கம்.

★

உலகில் கற்பு, காதல் என்பன போன்ற வார்த்தைகள் எப்படிப் பெண் மக்களை அடிமைப்படுத்தி அடக்கி ஆளவென்று ஏற்படுத்திப் பயன்படுத்தப்பட்டு வருகின்றனவோ, அதுபோலவேதான் ஒழுக்கம் என்னும் வார்த்தையும் எளியோரையும், பாமர மக்களையும் ஏமாற்றி மற்றவர்கள் வாழப் பயன்படுத்திவரும் ஒரு சூழ்ச்சி ஆயுதமேயல்லாமல், அதில் உண்மையோ, சத்தோ ஒன்றுமே கிடையாது. கற்பு, காதல், சத்தியம், நீதி, ஒழுக்கம் என்பனவெல்லாம் ஓரே தாயின் பிள்ளைகள். அதாவது குழந்தைகளைப்பயமுறுத்தப் பெரியவர்கள் "பூச்சாண்டி" "பூச்சாண்டி" என்பதுபோல், இவை எளியோரையும் பாமர மக்களையும், வலுத்தவர்களும், தந்திரக்காரர்களும் ஏமாற்றச்செய்த ஒரு பெரும் சூழ்ச்சியேயாகும்.

எப்படிக் குழந்தைப்பருவம் உள்ளமட்டும் பூச்சாண்டிக்கு மக்கள் பயப்பட வேண்டியிருக்கிறதோ, அதுபோலவேதான் அறிவும் சக்தியும் மக்களுக்கு ஏற்படும்வரை மேற்கண்ட ஒழுக்கம் முதலிய பூச்சாண்டிகளுக்கு அவர்கள் பயப்பட்டுத் தீரவேண்டியதிருக்கிறது.

உலகில் ஒழுக்கமான காரியம் அல்லது ஒழுக்க ஈனமான காரியம் என்பனவெல்லாம் அவைகளைச் செய்கிற ஆட்களின் வலிமையையும், அறிவையும் கொண்டு மதிக்கப்படுகிறதேயல்லாமல், வெறும் காரியத்தைப்பற்றி மாத்திரம் முடிவு செய்யப்படுவதில்லை.

சாதாரணமாக உலகில் "விபசாரம்" "பொய்" "களவு" "ஏமாற்றம்" முதலிய காரியங்களை ஒழுக்கங்கெட்ட காரியங்கள் என்று சொல்லப்படுகிறது என்றாலும், இந்தக் காரியங்கள் யாவையுமோ அல்லது ஏதாவது ஒன்றையோ இல்லாத மனிதர் எவரையும் இதுவரையில் உலகத்தில் காண முடியவே இல்லை.

ஒருசமயம் நம் கண்ணுக்குத் தென்படவில்லை என்று சொல்லுவதானால், அப்படிச் சொல்லும் மக்கள் ஒவ்வொருவரும் முதலில் தங்களைப்பற்றியே நினைத்துப் பார்த்து தங்களுடைய சிறு பிராயம் முதல் இன்றையவரை உள்ள பல பக்குவ வாழ்நாளில் மேற்கண்ட "ஒழுக்கங்கெட்ட" காரியங்கள் எனபடுவைகளில் எதையாவதொன்றை, மனோவாக்குக்காயங்களால் செய்யாமல் இருந்திருக்க முடிந்ததா, அல்லது செய்யாமல் இருக்கிறார்களா என்று நினைத்துப்பார்த்தால் உண்மை விளங்கிவிடும். (N. B. மற்றும் தங்களுடைய சுற்றத்தார் நண்பர், சுற்றியுள்ள அறிமுகமான ஜனங்கள் நன்றாய்த் தெரிந்த அன்னியர் முதலாகியவர்களில் யாராவது ஒழுக்கத்துடன், கற்புடன் நடந்து வந்ததுண்டா என்று சிந்தித்துப் பாருங்கள். இந்த இருவித முடிவைக் கண்டுகொண்ட பிறகு உலகத்தை நினைத்துப்பாருங்கள்).

மற்றும் உலகில் மக்கள் வாழ்க்கைக்கென்று இருந்துவருகிற தொழில்களில் முக்கியமானவைகளாகக் காணப்படுவது விவசாயம், வியாபாரம், கைத்தொழில், கூலி, வக்கீல், உத்தியோகம், வைத்தியம், விலைமாதர் தொழில் ஆகியவைகள்முதல், குருத்துவம், சன்னியாசம், துரைத்தனம், தேசீயம், ஈறாகவுள்ள அனேக துறைகள் ஆகும். இவற்றின்மூலமே மக்கள் பெரும்பாலும் விழுகின்றார்கள் என்பதை நாம் பிரத்தியட்சத்தில் பார்க்கின்றோம். இந்த மக்களில் யாராவது ஒருவர் ஒழுக்கமாக நடந்துகொள்வதை நாம் பார்க்கின்றோமா? ஒழுக்கம் என்றால் என்ன? அது எது என்கின்ற விஷயத்தில் நாம் இப்போது பிரவேசிக்கவில்லை. அதற்கு இந்த வியாசத்தில் இடம் வைக்கவுமில்லை. மற்றபடி நாம் ஒழுக்கம்என்பதாக உலகவழக்கில் எதை எடுத்துக்கொண்டு பேசுகின்றோமோ, மேற்கண்ட வாழ்க்கைத் துறைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் அந்தந்தத் துறைக்கும் எதையெதைஒழுக்கம்என்று அவர்களாகவேசொல்லிக் கொள்கிறார்களோ அதையும், அவரவர்கள் மற்றவர்களைப்பார்த்து எதை யெதை ஒழுக்கம் கெட்ட காரியம் என்று சொல்லுகிறார்களோ அதையும் மாத்திரமே இங்கு ஒழுக்கம் என்பதாக வைத்துக் கொண்டு, யாரிடமாவது இந்த ஒழுக்கத்தைக் கண்டுபிடிக்க முடிகிறதா என்றுதான் கேட்கிறோம்.

ஒரு வேலைக்காரன் செய்யும் ஒழுக்கங்கெட்டகாரியத்தை அந்த வேலைக்காரன் முன்னிலையிலேயே எஜமான் செய்துவிட்டு, வேலைக்காரனை மாத்திரம் ஒழுக்கங்கெட்டவன் என்று சொல்லுகிறான்.

ஒரு குமாஸ்தா செய்யும் ஒழுக்கங்கெட்ட காரியத்தை மேல் அதிகாரி அந்த குமாஸ்தா முன்னிலையிலேயே பலதடவை செய்துவிட்டு, குமாஸ்தாவை ஒழுக்கங் கெட்டவன் என்று கூறுகிறான். (N. B. ஒரு மகன் செய்யும் ஒழுக்கங் கெட்ட காரியத்தைத் தகப்பன் செய்துவிட்டு, மகனை ஒழுக்கங் கெட்டவன் என்று சொல்லுகிறான்.)

இதுபோலவே, எல்லாத் தொழில் துறையிலுமுள்ள மக்களும், அவரவர்கள் வாழ்நாட்களில் ஒழுக்கயீனமாக நடந்துகொண்டே மற்றவர்களை ஒழுக்கயீனர்கள் என்று சொல்லிவருகிறார்கள். இவை நாம் குறிப்பிட்ட ஒருசிலரிடம் மாத்திரம் இருப்பதாய்ச் சொல்வரவில்லை. "ஒழுக்கமாய்" மக்கள் யாராலும் நடக்க முடியாது என்றும், ஒழுக்கம் என்பதாக ஒரு குறிப்பிட்ட குணமோ, செயலோ இல்லை என்றும், ஒழுக்

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க)

# புதிய திராவிடத்தின் அரசியலமைப்பு.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

"கன்னடமும், களிதெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும் உன்னுதரத்து உதித்தெழுந்து ஒன்றுபல" ஆயினது என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளை கூறுகிறார். தமிழிலிருந்து திரிபு அடைந்த கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவு போன்ற தென்னிந்திய மொழிகளைப் பேசுபவர்கள் திராவிடர்கள் என்று சரித்திரக்காரர்கள் வலியுறுத்திக் கூறியிருக்கும் பொழுது, ஆந்திரர்களோ அல்லது மலையாளிகளோ மொழியை முன்னிறுத்தி தங்களைத் தனியினம் என்று இன்று கூறிக்கொள்வார்களானால் இது மிகவும் தவறான போக்கு என்றுதான் கருதவேண்டியிருக்கும். சி. ஆர். ரெட்டி அவர்கள் கூறியிருப்பது போன்று "மீதமுள்ள சில விஷயங்களைக் கவனித்து மேற்பார்வையிட" ஒரு சம்மேளனம் அமைப்பது என்ற முறையைப் பின்பற்றினால், மக்கள் தங்களைச் சம்மேளத்தின் குடிகள் என்று கூறிக்கொள்ளாயல் நாடுகளின்-மாகாணங்களின-பிரஜைகள் என்று அதாவது ஆந்திரர், மலையாளி என்பன போன்று கூறிக்கொள்வார்களேயல்லாமல் தங்களைத் "திராவிடர்கள்" என்று கூறிக்கொள்ளும் சூழ்நிலை ஏற்படாமல் போய்விடும். அத்துடன் நாட்டின் பொது முன்னேற்றம் என்பதெல்லாம் வெறும் கனவாக முடிந்துவிடும்.

பண்டைய சிறப்பிற்குரிய திராவிட மக்களின் வாழ்வு மறுமலர்ச்சி பெற்று, அழிந்துபோன கலை, நாகரீகம், பண்பாடு ஆகியவைகளை மீண்டும் பெற வேண்டுமானால், இந்த நாட்டில் வாழுகின்ற 5 கோடி மக்களில், ஒவ்வொருவருடைய உள்ளத்திலேயும் "நான் திராவிடன்" என்ற எண்ணம் உதித்தாகவேண்டும். இந்த எண்ணம் உதித்தால்தான் மக்களின இதயங்களில் தோழமை அரும்புவிடும். நாடும் பல துறைகளில் முன்னேறி மக்களும் சிறப்புடன் வாழ இயலும். வருங்காலம் உயரிய நிலையைப்பெற்று, திராவிடத்தை உலகிற்கு அறிமுகப்படுத்திவைத்து, உலக மக்களுடன் உயர் நிலையில் சமமாக வாழவேண்டுமானால், அரசியல் அமைப்பு இதற்கு வழிகாட்டுவதாக அமைய வேண்டியது இன்றியமையாததாகும். ஆகவே வருங்கால திராவிட அரசியல் அமைப்பு முறை, சமஷ்டியை பின்பற்றுவதா அல்லது சம்மேளனமே போதுமா என்று முடிவுகட்டும் பொறுப்பை மக்களிடமே விட்டுவிடுவோம்.

## உரிமையுண்டா?

தமிழகம், ஆந்திரம், கர்னாடகம், கேரளம் ஆகிய நான்கு வட்டாரங்களும் வடநாட்டுத் தொடர்பிலிருந்து பிரிந்து, தங்களுக்குள் ஒரு சமஷ்டியை ஏற்படுத்திக் கொண்டு சுதந்தர நாடுகளாக வாழ்வதுதான் திராவிடத்தின்—தென்னாட்டின்—முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது என்பது நன்கு விளங்கும். நமது பொது எதிரியான வடநாட்டு ஏகாதிபத்தியத்திடமிருந்து பிரியும் இந்த நாடுகள் தனித்தனி நாடுகள்தான் என்று பிரித்துக் கூறும்படியான அளவுக்கு ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபட்ட கலை, நாகரீகம் கொண்டல்லாமலும், இயற்கையே ஏற்படுத்தும் எல்லைக் கோடுகளைப் போன்று வானமுகட்டை தாவிப்பிடிக்கும் பெரிய மலைகளைப் பெற்று விளங்குகிறது. பலமைல்கள் வறண்டுகிடக்கும் பாலைவனங்களையோ, அல்லது மனித சஞ்சாரமே சாத்தியமற்றது என்று கருதும்படியாக அமைந்திருக்கும் அடர்ந்துகிடக்கும் பெரிய பெரிய காடுகளையோ, அல்லது கல்லையும் மரக்கிளைகளையும் உருட்டிக்கொண்டு பயங்கர ஓசையுடன் என்றுமே ஓடிக்கொண்டிருக்கும் காட்டாறுகளையோ, இயற்கை ஏற்படுத்தியிருக்கும் எல்லைக் கோடுகளாகக் கொண்டிருக்காமல், நாளை நம்மில் சிலர் இவைகள்தான் இன்னின்னவற்றின் எல்லைகள் என்று வகுக்கப் போவதால் ஏற்படவிருக்கும் இந்த நாடுகள், விடுதலைபெற்றவுடன், தங்களிடையே ஒரு பொது சர்க்காரை ஏற்படுத்திக் கொள்வது சாத்தியமற்றது என்று எவராலும் மறுக்க முடியாது.

ஆயினும், இந்த நான்கு வட்டாரங்களில் ஒன்றோ அல்லது சிலவோ கூட்டாட்சி முறையில் இருக்க விரும்பாமல் தனித்திருக்க விரும்பினால் அதற்கு உரிமையுண்டா என்று கேட்டால், தனித்திருக்க அவைகளுக்கு பூர்ண உரிமை உண்டு என்றுதான் சொல்வோம். நம்மைப் பொறுத்தமட்டிலும் நமது கூட்டுத் தோழர்களின் பகுதிகளை அடிமைப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொஞ்சங்கூட கிடையாது. அவர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் பிரிந்து தனித்துப் போக தாராளமாக அனுமதிக்கப்படுவார்கள். ஆனால், பிரிய விரும்பும் நாடுகள் எப்பொழுது பிரிய வேண்டும் என்பதைத்தான் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

இந்தியாவில் பிரிவினை ஏற்பட்ட விதத்தைச் சற்று கவனிப்போம். வெள்ளையர்களிடமிருந்து நாடு விடுதலை பெறுமுன், அதற்கென ஒரு அரசியல் அமைப்பை ஏற்படுத்திக் கொள்வதின் பொருட்டு இந்தியா முழுவதற்கும் ஒரு அரசியல் நிர்ணய சபை கூட்டப்பட்டது. இந்த சபை முழு ஆதிபத்திய உரிமையுடையதென்றும், இதற்குப் பிரதிநிதிகளை அனுப்பும் வட்டாரங்கள் அது வகுக்கும் அரசியல் அமைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டும், அதன்படியே செய்யவும் இன்று முயற்சிக்கிறார்கள். ஆனால் இந்திய அரசியலில் முக்கியத்துவம் வகித்து வந்த ஸ்தாபனமாகிய முஸ்லிம்லீக் தங்களுடைய பிரதிநிதிகளை அந்தச் சபைக்கு அனுப்ப மறுத்துவிட்டதுடன், தங்களுக்கென தனி நாடும், தனி அரசியல் நிர்ணய சபையும் தேவையென்று கிளர்ச்சி செய்து வெற்றியும் பெற்றுவிட்டார்கள். பிறநாடுகளைப் போல அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொண்டு, அதன் அமைப்பு முறை பிடிக்காமல், பின்னர் விலகாமல், ஆரம்ப காலத்திலேயே விலகிக் கொண்டார்கள். இவர்கள் இப்படிச் செய்தது மிகவும் நியாயமானது என்பதை நாம் விளக்கிக் கூறவேண்டியதில்லை.

திராவிடத்திலுள்ள பிறவட்டாரத்தினர்களும் ஆரம்ப காலத்திலேயே தனித்துப்போக விரும்புவார்களானால் அது மிகவும் தவறான போக்காகவே முடிந்துவிடும். இந்தியாவில் இந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்து ஒத்து வாழ்வது ஒரு வேளை சாத்தியமற்ற காரியமாக இருக்கலாம். ஆனால் திராவிடத்தைப் பொறுத்தமட்டில் அப்படிக் கருதுவதற்கில்லை என்றுதான் கூறவேண்டும். இந்தியாவில் ஏற்பட்டிருப்பதுபோல ஜனநாயகமற்றதாகவும், அதற்குப் பிரதிநிதிகளை அனுப்பும் எல்லா மாகாணங்களும் அது வகுக்கும் திட்டத்தை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்று கூறும் பாசிசப் போக்குடையதாகவும், வருங்கால திராவிடத்

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

ற்க்கட்டளை

# சிறப்புமிக்க ஜில்லா மாநாடுகளின்

# முழு நடவடிக்கை விபரம்.

★

28-5-49-ல் கோவையில் மாவட்ட திராவிடர் கழக மாநாடு மிகச் சிறப்பாக மத்திய திராவிடர் கழகத் தலைவர் தோழர் தி. பொ. வேதாசலம் தலைமையில் நடைபெற்றது. காலை 9-மணிக்கு சுக்கிரவாரப் பேட்டையிலுள்ள திராவிடர் கழகத்திலிருந்து தலைவர்கள் ஊர்வலம் புறப்பட்டுவந்தது. தலைவர்கள், கோவை சென்ரல் ஸ்டுடியோக்காரர்களால் மிகச் சிறப்பாகத் தயார் செய்திருந்த பெரிய ரதத்தில் ஊர்வலமாக மாநாட்டு பந்தலுக்கு அழைத்து வரப்பட்டனர். ஊர்வலத்தில் இதுபோன்ற சிறப்பான ரதமும் 10,000க்கு மேல் மக்கள் கலந்து கொண்டதில் பல தாய்மார்களும் தொழிலாளர்களும், மாணவர்களும் அணிவகுத்து கழகக் கொடி தாங்கி இயக்க ஒலிகளை வானதிர முழக்கி வந்ததும் குறிப்பிடத்தகுந்ததும், இதுவரையிலும் எந்த மாகாண மாநாட்டில் கூட நடவாத முறையிலும் அவ்வளவு அழகாக அமைந்திருந்தது. ஊர்வலத்தை நடிகவேள் எம். ஆர். ராதா குதிரையில் சவாரிவந்து ஒழுங்கு படுத்திவந்தார். சி. எஸ். ஆர். திடலில் அர்ச்சுனன் பெயரில் பந்தல் மிகப் பெரிதாய் 50,000 மக்களுக்கு மேல் கொள்ளக்கூடிய அளவில், மின்சார விளக்குச் சோடனை, மூன்று ஒலி பெருக்கிகள் முதலியவைகளுடன் அமைக்கப்பட்டிருந்தது. பந்தலின் முகப்பில் சித்திர வேலைகளால் அலங்காரம் செய்யப்பட்டு உச்சியில் தலைவர் பெரியார் அவர்களுடைய முழு உருவப்படமும் அர்ச்சுனன் படமும் அமைக்கப்பட்டிருந்தது.

ஊர்வலம் சரியாக காலை 11-மணிக்கு பந்தலை வந்தடைந்தது. தலைவர்கள் பந்தலுக்குள் நுழையும் போது விண்ணதிர வரவேற்பு ஒலி கிளம்பிற்று.

குறிப்பாக கோவை பிரமுகர்கள் பலர் சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார், ஜி. டி. நாயுடு, வி. சி. குமாரசாமி கவுண்டர், வி. எஸ். செங்கோடய்யா, எஸ் பீமய்யச் செட்டியார், ஏ. டி. கிருஷ்ணசாமி முதலியார், அபிராமம் செட்டியார், எஸ். கே. சொக்கலிங்கம் பிள்ளை முதலியோர் உட்பட பலர் வந்திருந்தனர். பெரியாரின் பெரியார் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களும் திருப்பத்தூர் வழக்கறிஞர் சாமி நாயுடு ஆகியோரும் வந்திருந்தனர்.

மாநாடு மூவலூர் தோழியர் இராமாமிர்தத்தம்மாள் கொடியேற்று விழாவுடன் ஆரம்பிக்கப்பட்டது. அம்மையார் தம் கொடியேற்று விழா சொற்பொழிவில், பெரியார் நாட்டுக்கு, குறிப்பாகப் பெண்கள் சமுதாயத்திற்குச் செய்துள்ள சேவைகளைக் குறிப்பிட்டு பெண்கள் மூட நம்பிக்கைகளைத் தகர்த்தெறிந்து முன்னேற வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு கொடியின் குறிக்கோளை விளக்கினார். சொற்பொழிவிற்குப்பின் வாத்திய கோஷத்தினிடையே கொடியை யேற்றுவித்தார்.

பின்னர் அறிஞர் சி. என். அண்ணாதுரை மாநாட்டைத் திறந்துவைத்து சொற்பொழிவாற்றினார். அவர்தம் சொற்பொழிவில் இம்மாநாடு இருவகையில் முக்கியத்துவம்வாய்ந்ததென்றும், ஒன்று இம்மாநாட்டில் கலைஞர்கள் விஞ்ஞான வித்தகர்கள், சொந்தமுயற்சியினால்நிலையைஉயர்த்தியுள்ளவர்கள், நம்மைவிட்டு பிரிந்தவர்கள் பலர் கூடியிருப்பதென்றும், மற்றொன்று ஆச்சாரியார்—பெரியார் சந்திப்பிற்குப் பின் முதல் மாநாடென்றும் குறிப்பிட்டார். ஆச்சாரியார்—பெரியார் சந்திப்புப் பற்றி அரசியல் ஆருடப் பத்திரிகைகள் பல, பலவகையாக எழுதி வருவதாகவும், தலைவர்களின் பேச்சிலுள்ள ரகசியம் இயக்கத்தின் வளர்ச்சிக்கு உகந்ததாயின் தெரிவிக்கும்படியும் தலைவர் பெரியாரவர்களைக்கேட்டுக் கொண்டார்.

இருவர் சந்திப்புக்குபின் ஆச்சாரியார் பாதாளலிங்கக்குகையை திறந்த போது, அவர்பேசியுள்ளபேச்சை எப்போதும் படிப்பதைவிட அதிககவனத்துடன் தாம் படித்ததாகவும், ஆனால் இதில் தாம் காணுவது, சரிந்து விழும் பழமை வைதீகத்துக்கு உயிர் கொடுக்கும் முயற்சியாகவும், நமக்கு சவால் விடுத்துள்ளதாகவுமே இருக்கிறது என்றார். சரியான ராஜதந்திரியானால் ஆச்சாரியார் நமது கொள்கைகளை புகழ்ந்துகூற தைரியமில்லாவிட்டாலும் நம்மைப்பற்றி, தலைவரை சந்தித்த பின்பாவது, கையாண்டி செய்யாது இருந்திருக்க வேண்டுமென்றும், அதற்கு மாறாக ஆச்சாரியார், சுயமரியாதை இயக்கம் ஆண்டவன் லீலைகளில் ஒன்று என கிண்டல் செய்துள்ளதாய் கூறி; ஆகஸ்டு போராட்டத்திற்கு துரோகம் செய்து விட்டு ஆட்சியில் அமர்ந்துள்ளதும், காந்தியாரைச் சுட்டுக்கொன்றதும், புத்தமதக்காரர்களை துன்புறுத்தி ஒழித்ததும், சமணர்களைக் கழுவில் ஏத்தியதும் ஆண்டவன் லீலைகள் என கூறும் வழி வழிவந்தவர் பேசுவது ஆச்சரியமல்லவென்றும், ஆனால் இக்காலத்தில் 1949-ல் தலைவர் பெரியாரை சந்தித்தபின் இப்படிப்பேசுவது தான் அறிவுடைமையாகுமா என்றும் கேட்டார்.

மேலும் மாகாணசர்க்கார் பட்டாளத்தை பக்கபலமாகவைத்திருந்தும், பட்டேல் நேருகளைபாதுகாப்புக்கு வைத்திருந்துங்கூட அடக்கு முறையை நம்பி வாழுவது இவர்களின் கிலியைக் காட்டுகிறதென்றும், நம்பத்திரிகைகளின் மீது நடவடிக்கை எடுக்க எண்ணுவதும், நாடகம், காவியம், ஊர்வலம் முதலியவைகளுக்கு தடைவிதித்து நடப்பதும் யாருக்குத் தீங்கிழைப்பதென சர்க்கார் சிந்தித்துச் செய்ய வேண்டுமென்றும் கூறினார்.

காமராஜர் கருத்தழிந்து, திராவிடர் கழகத்தார் பதவி எற்று 12 அவுன்ஸ் அரிசி கொடுக்கட்டுமே என்று அறை கூவி அழைப்பதைத் தாம் எற்றுக் கொள்வதாகவும், தம்கட்சிக்குப் பதவி கூடத் தேவையில்லை, வெட்கத்தைவிட்டுத் தலைவர் பெரியாரவர்களிடம் இரண்டாண்டுகளுக்கு யோசனை ஒழுங்காகக் கேட்டு வந்தாலே ஆட்சி திருந்துவதுமட்டுமல்ல, மந்திரிசபை நெருக்கடிகூட தீருமென்றும் கூறி, இதுவரையும் இயக்கத்தின் ஒவ்வொரு திட்டத்தையும், அவர்களே ஒன்றொன்றாக சிறிது சிறிதாக ஏற்றுவருவதாய் விளக்கினார். திராவிடர் கழகம் தேர்தலில் நிற்காவிட்டாலும், மக்களுக்குத் தேர்தல் காலத்தில் கடமையை உணர்த்தத் தவறாது என்றும், நிற்பவர்கள் யோக்கியதையையும், அவர்கள் மக்களுக்கு இதுவரையும் செய்துள்ள துரோகத்தையும், எடுத்துக் கூறத் தவறாதென்றும் பேசினார்.

பின்னர் பெத்தாம்பாளையம் பழனிசாமி வரவேற்புரை நிகழ்த்தினார். (முழுவிபரம் விடுதலையில் வந்துள்ளது) அதனையொட்டி வரவேற்புத் துணைத் தலைவர் எஸ். ஆர். சுப்பிரமணியம் எல்லோரையும் வரவேற்றுச் சொற்பொழிவாற்றினார். (முழு விபரம் வேறுபக்கம்) பின்னர் மோட்டார் மன்னர் ஜி டி. நாயுடு அவர்கள் பெரியாரவர்களை ஆச்சாரியாரைச் சந்தித்துப் பேசிய உண்மையை தெரிவிக்கும்படி வலியுறுத்திப் பேசினார்.

பின்னர் மாநாட்டுத் தலைவராகத் தோழர் தி. பொ. வேதாசலம் அவர்களை வரவேற்புக் கழகத் தலைவர் பிரரேபித்ததைப் பெரியாரும் மற்றவர்களும் ஆமோதித்தப் பின் நீண்ட கைதட்டலுக்கிடையே தலைவர் தலைமையேற்றுச் சொற்பொழிவாற்றினார். திராவிடர் கழகம் மக்களை அமெரிக்கர் போல், ஆங்கிலேயர்போல், ருஷி

யர்போல் நினைக்கவும், நடக்கவும் செயல்கள்பல ஆற்றவும், வீரர்களாகத் திகழவும் முயற்சி செய்துவருவதாய்க் கூறினார். நம் நாட்டில் மட்டும் 100 க்கு 99 பேர் படிக்காதவர்களாகவும், மேல் நாடுகளில் முற்றும் கற்றவர்களாகவே இருப்பதற்கும், இங்கு மட்டும் பல ஜாதிகள் இருப்பதற்கும், ஏனைய நாடுகளில் அவை இல்லாதிருப்பதற்கும், இங்கு மதம் தலைவிரிகோலமாய் எல்லாத் துறையிலும் கூத்தாடுவதற்கும், அந்நிய நாடுகளில் அது தலைகாட்டாதிருப்பதற்கும், இங்குள்ள மக்கள் அடுத்த உலகத்தையே பற்றிக் கவலைப்படுவதும், மற்றநாட்டு மக்கள் அடுத்த உலகத்தைக் கவனியாது உலக அவசியங்களையே கவனிப்பதும், இங்குள்ள பத்திரிகைகள் பெரும்பாலும் பொய்யை மெய்போன்று சொல்வதும், வெளிநாட்டுப் பத்திரிகைகள் உண்மையை எழுதுவதும், நம் மக்கள் காட்டுமிராண்டித் தன்மையில் வாழ்வதும், பிறமக்கள் நாகரீகத்தில் சிறந்து திகழ்வதும், நம் நாட்டில் மட்டும் சிறு கூட்டம் பலரை அடக்கி ஆளவும், பிறநாட்டில் சமத்துவம் செழித்திருப்பதற்கும் காரணமென்ன என எண்ணிப் பார்த்து நாமும் அதுபோன்று வாழ வழிவகுக்க வேண்டுமென்றார்.

தலைமையுரையுடன் காலை நிகழ்ச்சி முடிவுற்றது. மாலை 3—மணிக்கு மாநாடு மீண்டும் கூடப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தீர்மானங்களுக்குப்பின் தோழர் கே. கே. நீலமேகம் சர் பி. தியாகராயர் படத்தையும், ஆசைத்தம்பி தளபதி அழகிரி படத்தையும், சேலம் எம். சித்தையன் நாகம்மையார் படத்தையும், என். வி. நடராசன் அர்ச்சுனன் படத்தையும் திறந்து வைத்தார்கள். பின் தோழர் எம். ஆர். ராதா சிறிது நேரம் பேசினார்.

அதன்பின் தலைவர் பெரியாரவர்கள் திராவிட நாட்டுப் படத்தைத் திறந்து வைத்து சுமார் 3 மணி நேரம் சொற்பொழிவாற்றினார்கள். (முழு விபரம் விடுதலையில் காண்க).

தலைவர் முடிவுரையுடன் செயலாளர் நன்றி கூற மாநாடு முடிவுற்றது.

இரவு நடிகவேள் எம். ஆர். ராதாவின் "மறைந்த மாவீரன் கணபதி" எனும் நாடகம் பெரியாரவர்கள் தலைமையில் நடைபெற்றது. பந்தல் முற்றும் நிறைந்திருந்து வெளியேயும் பல்லாயிர மக்கள் இருந்து கேட்டனர். நாடகத்திற்கு பந்தலினுள் பாதிக்கு பெண்கள் குழுமியிருந்தது குறிப்பிடத்தக்கது.

29-5-49 காலை தமிழ்ப் பெரியார் திரு. வி. க. தலைமையில் கோவை மாவட்ட முதலாவது திருக்குறள் மாநாடு நடைபெற்றது. பல அறிஞர்களும், தமிழாசிரியர்களும், புலவர் பெருமக்களும் மாணவர்களும் குழுமியிருந்தனர்.

பேராசிரியர் சி. இலக்குவனார் எம். ஓ. எல். மாநாட்டைத் திறந்துவைத்து சொற்பொழிவாற்றினார். அவர் பேசுகையில் காரல் மார்க்சுக்கு அவர் கொள்கைகளைப் பரப்ப லெனின் கிடைத்ததைப் போன்று பெரியாரவர்கள் திருவள்ளுவர் குறளுக்குக் கிடைத்திருப்பதாகக் குறிப்பிட்டார். திருக்குறள் உலகத்திற்கே நீதி போதிக்கும் நூலென்றும், அதற்கு உரை எழுதியுள்ள பரிமேலழகர் ஆரியக் கருத்தை வலிந்துரைத்துக் கெடுத்துள்ளாரென்றும், ஒவ்வொருவரும் குறளை ஆராய்ந்து படித்துப் பலன் பெற வேண்டுமென்றும், ஆரியரால் பெண்கள் நிலை மிக இழிவாகக் கருதப்பட்டு வந்துள்ளதென்றும். ஆனால் தமிழர் பெண்களுக்கு தக்க மரியாதையும் பெருமையும் தந்துள்ளார்கள் என்பது குறளில் காணக்கிடக்கிறதென்றும் கூறினார். வள்ளுவர் பிறப்பைப்பற்றி உள்ள கற்பனையையும் அமைக்கப்பட்டுள்ள தவறான கருத்தைப் பரப்பும் உருவப்படங்கள்பற்றியும் கண்டித்தார்.

பின் வரவேற்புக்கழகத் தலைவர் சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் வரவேற்புரையாற்றினார். வள்ளுவர் கொள்கையை வளர்க்க சாதிச்சண்டை, அரசியல்சண்டை, மதச்சண்டைஆகிய எல்லாவற்றையும் விட்டு ஒரு முகமாக மேடைக்கு எல்லோரும் வரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். தமிழ் பண்பாட்டை வரையறுப்பது குறளென்று கூறி எல்லோரையும் வரவேற்று, இன்று வள்ளுவரின் பிரதிபிம்பமாக வாழும் திரு. வி. க. அவர்களை தலைமை தாங்கி நடத்திக் கொடுக்கக் கேட்டுக்கொண்டார். அதனை ஆமோதித்து பெரியார், எம்.எஸ். பழனியப்ப முதலியார், வி. எஸ். செங்கோட்டையா, ஈ. வெ. கிருஷ்ணசாமி ஆகியோர் பேசினர். பின் தமிழ்ப்பெரியார் திரு. வி. க. தலைமையேற்று முன்னுரை நிகழ்த்தினார்கள். முதல் முதலில் குறள்மீது மக்களுக்கு ஆர்வம் உண்டாகும்படி செய்தவர் பெரியாரவர்களேஎன்றும், அவ்வுணர்ச்சி இன்று கொழுந்துவிட்டெரிவது கண்டு தாம் இறும்பூதெய்துவதாகவும் குறிப்பிட்டார். ஆதிபகவன் என்பதைபற்றியுள்ள உரையாசிரியர்களின் கருத்தை விளக்கிக் கூறினார். சில குறள்களுக்கு பரிமேலழகர் தந்துள்ள உரைகளை எடுத்துக்காட்டி இவை தவறானவை எனக்கூறி விளக்கினார். காதல்மனை வாழ்க்கையை குறள் வலியுறுத்துவதாய் எடுத்துக்காட்டி, தாம் பத்ய வாழ்க்கையில் அரசாங்கம் தலையிடுவதை நிறுத்திவிடுமானால், அமைதியும் மக்கள் சமுதாயத்தில் அன்பும் நிலவுமென்றார். மண சம்பந்தமாக மத, நிற, இன, சாதிக்கட்டுத்திட்டங்கள் அறவே ஒழிதல்வேண்டும், ஒழிதல் வேண்மென வலியுறுத்தினார்.

தலைவர் முன்னுரைக்குப்பின் இடைவேளைக்கு மாநாடு கலைந்து மீண்டும்மாலையில்கூடிற்று. புலவர்கள் சிவஞானம், கிருஷ்ணசாமி ஆகியோர் பேசியபின் தோழர்கள் அன்பழகன், திருக்குறள் முனிசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இடையில் தலைவர் ஊர் செல்லவேண்டியிருந்ததால் தம் பின்னுரையை முடித்துக் கொண்டு சென்றார்கள்.

அதன்பின் பெரியாரவர்கள் "நான் கண்ட வள்ளுவர்" என்னும் பொருள் பற்றி இரண்டு மணி நேரத்திற்கு மேல் பேசினார்கள். சென்ற 30 வருடங்களாகத் தான் செய்துவரும் சேவையும் நோக்கங்களும் குறளில் பதிந்து கிடப்பதால்தான் அதனை மக்களுக்கு சிபார்சு செய்வதாகவும், மக்கள்ஒவ்வொருவரும்அதனைஆராய்ந்து பின்பற்றவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள் (முழுவிபரம் விடுதலையில் பார்க்க.)

இரவில் நடிகவேள் எம். ஆர். ராதா "இரத்தக் கண்ணீர்" எனும் நாடகத்தை மிகச் சிறப்பாக நடத்தினார்.

---

## முன்னேற்ற வாலிபர் சங்கம்.

---

எல்பிட்டியா மே 25.

இன்று மாலை "முன்னேற்ற வாலிபர் சங்கம்" என்ற சங்கம் நிறுவப்பட்டு இதன் கூட்டம் தோழர் ரா. முத்துசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இச் சங்கம் தோழர்கள் ஏ. வெ. அன்பானந்தம் தா. செல்லையா, இவர்களுடைய முயற்சியால் உருவாக்கப்பட்டிருக்கிறது. சங்கத்தின் அவசியம்பற்றி தோழர் ஆ. ராமலிங்கம் சொற்பொழிவாற்றினார். நிர்வாகக் கமிட்டித் தேர்தல் ஜூன் 5-ந் தேதி நடைபெறும். இச் சங்கத்தின் நோக்கம் சமூக முன்னேற்றத்திற்கும், நலனுக்கும் ஜாதி மத பேதமில்லாமல் சேவை செய்வதே என்று திட்டம் வகுத்துள்ளனர்.

---

# கழகத்திலில்லாத திராவிடனைக் காணமுடியாத நிலை யுண்டாகட்டும்!

## எஸ். ஆர். சுப்பிரமணியத்தின் வரவேற்புரை.

★

பேரன்புமிக்க பெரியோர்களே! திராவிடப் பெருங்குடி மக்களே! தாய்மார்களே! இளைஞர்களே! வருக! வருக!!

திராவிடப் பெருங்குடி மக்களாகிய தங்களனைவரையும் இம் மாநாட்டின் வரவேற்புக் கழகத்தின் சார்பில் அன்புடன் வரவேற்கின்றேன். எங்களழைப்பிற் கிணங்கி வந்து எங்களைப் பெருமைப்படுத்தியதற்காக முதலில் எமது மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். தங்களை அன்புடன் வரவேற்கு முகத்தான் தங்கள் முன்னிலையில் எனது கருத்துக்கள் சில சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

### திராவிடர்.

திராவிடப் பெருங்குடி மக்களாகிய நம்மின முன்னேற்றப் பணிபுரிய அமைக்கப்பட்ட, நம் கழகத்திற்கு நமது ஒப்பரும் தலைவர் பெரியார் அவர்கள் 'திராவிட கழகம்' என்னும்- இனவுணர்ச்சியூட்டும் அழகிய ஆழ்ந்த கருத்தமைந்த பெயரைச் சூட்டினார். அதிலிருந்து நாம் நம்மைத் திராவிடர் எனப் பெருமையுடன் கூறிக் கொள்கிறோம். நாம் அவ்வாறு கூறிக் கொள்வதை வேண்டுமென்றே நம் இன எதிரிகள் எதிர்த்து வருகின்றனர். திராவிடர் என்னும் பெயர் நாமாக, புதிதாக இட்டுக்கட்டிய பெயரா? இல்லவே இல்லை. இது பழங்காலத்திலிருந்து நமக்குச் சொந்தமாக வழங்கிவரும் பழம் பெயர். நாலாம் வகுப்பு வரலாற்றுச் சுவடியைத் திறந்தால் முதல் பக்கத்தில் காணப்படுவது திராவிடர் என்னும் பெயர்தான். அவ்வாறு நூலை எழுதியவர்களில் பெரும்பாலோர் திராவிடர் என்னும் பெயரை மறுத்துக்கூறும் கூட்டத்தினரேயாவர். தாங்களெழுதிய நூலில், அதுவும் வரலாற்று நூலில் தாங்களே திராவிடர் வரலாற்றை எழுதி, அதை திராவிடச் சிறுவர்களுக்குப் பாட நூலாக வைத்துப் பாடமும் சொல்லிக் கொடுத்துவிட்டு அதே வாயால் திராவிடர் என்பது வெறுங்கூச்சல்; அப்பெயர் இத்தென்னாட்டு மக்களுக்கு வழங்கவில்லை எனப் பொய் புகல்வோரோடு சேர்ந்து கொண்டு, திராவிடர்களில் சிலரும் நம்மைக் கேலி செய்வதுதான் நமக்கு வியப்பாக இருக்கிறது. ஆரியர் இங்கு வருவதற்குமுன் இந்த நாட்டை ஆண்டவர் திராவிடர் என்கிறது நாலாம் வகுப்பு வரலாற்றுச் சுவடி. மொழிவகையில் திராவிடமொழி ஒன்றென்கின்றனர் மொழியாராய்ச்சி வல்லுநர். உலகக் கவி எனப் போற்றப்படும் தாகூர் எழுதிய 'ஜனகணமன' என்னும் பாட்டு 'திராவிட உத்கல வங்க' என்கின்றது. சிவஞான போதத்திற்கு மாதவச் சிவஞான முனிவர் எழுதிய உரை 'திராவிட மாபாடியம்' எனப்படுகிறது. 'தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நற்றிரு நாடும்' என்கின்றார் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை. தேசிய கவி, அமரகவி என்றெல்லாம் போற்றப்படும் காலஞ்சென்ற பாரதியார் நம் கட்சியைத் திராவிடக் கட்சியென்றே கூறுகிறார். இவ்வளவையும் பொய்யென்பது எவ்வளவு அறியாமை!

### திராவிட நாகரிகம்.

தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகள் தோன்றுமுன் தெலுங்கர், கன்னடியர், மலையாளிகளாகிய நாமெல்லோரும் தமிழே பேசினோம். தமிழராகவே இருந்தோம். ஆரிய மொழிக் கலப்பால்திரிந்தே தெலுங்கு கன்னட முதலிய திராவிட மொழிகள் உண்டாயின என்பது, 'கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமுந் துளுவும் உன்னுதிரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்' என்னும் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் ஆராய்ச்சியுரையால் விளங்கும். தெலுங்கர், கன்னடியர், மலையாளிகள் எல்லாம் தமிழரே. இவ்வுண்மையை அன்னார் உணரும்படி செய்யும் பொறுப்பு நம் கழகத்தைச் சேர்ந்ததேயாகும். தமிழர் நாகரிகமே திராவிடர் நாகரிகம். பழங்காலத் திராவிடர் நாகரிகக் களஞ்சியங்களே பழந்தமிழ் நூல்கள். அவற்றுள் தலையானது திருக்குறள். திருக்குறள் கூறும் வாழ்க்கை முறை, அரசியல் முறை, ஒழுக்கமுறை முதலியவற்றை நோக்கினால் திராவிடப் பெருங்குடிமக்களாகிய நாம் இன்றுள்ள நிலைமைக்கும், நமது முன்னோர்கள் வாழ்ந்த நிலைமைக்கும் அப்பாடா! எவ்வளவு தூரம்! 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை' 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறம்', அன்பிலாரெல்லாம் தமக்குரியர்', 'விருந்து புறத்ததா தானுண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற்பாற்றன்று' எவ்வளவு உயரிய பண்பாடு! பிறரெல்லாம் உயிருக்காக மானத்தைவிட, மானத்துக்காக உயிரை விட்டவன் திராவிடன். ஒழுக்கத்தை உயிரினும் பெரிதாக மதித்து வாழ்ந்தவன் திராவிடன். திருக்குறளிலுள்ள பண்புடைமை, பெருமை, மானம், சான்றாண்மை என்னும் அதிகாரங்களை நோக்கினால் நமது முன்னோர்களாகிய திராவிடப் பழங்குடி மக்கள் எவ்வளவு உயரிய நிலையில் வாழ்ந்து வந்தனர் என்பது புலப்படும். ஒற்றர் திறமை, தூதுஉரைப்போர் தன்மை, அரணின் அமைப்பு, போர் செய்யும் முறை இவற்றையெல்லாம் நோக்கினால் நமது பழம் பெருமை கடலினும் பெரிதாகவன்றோ இருக்கிறது! அரசியலில் நாம் இன்றுள்ள இழிநிலையை யெண்ணினால் வெட்கித் தலை குனிய வேண்டியிருக்கிறது. அப்பழைய நிலையை அடையவே நாம் இழந்த உரிமையைப் பெற்று இன்ப வாழ்வு வாழவேதிராவிடக்கழகம் பாடுபடுகிறது. தலைவர் பெரியார் அவர்கள் தலைமையின்கீழ் விரைவில் பெற்று இன்புறுவோம்.

### ஆரிய மாயை.

இவ்வளவு சீரும் சிறப்புடன் வாழ்ந்து வந்த நாம், ஒன்றாயொரு குலமாய் இருந்த நாம், இமயமுதல் குமரிவரை ஒரு மொழி வைத்தாண்ட நாம் எவ்வாறு இத்தாழ்நிலையை அடைந்தோம்? எப்படிச் சிதைந்து செல்லாந்தட்டியானோம்? ஆண்ட வழி வந்தோர் இன்று ஏன் அயலார்க்குடிமையாய் அலைகிறோம்? 'கேடில் விழுச் செல்வம் கல்வி' எனக்கற்று அறிவைப்பெற்று நலமுற்று நல்வாழ்வு வாழ்ந்து வந்தோர் மரபில் வந்த நாம் ஏன் இன்று 100-க்கு 95 பேர் தற்குறிகளாய் இருந்து வருகிறோம்? இந்த நிலை நமக்கு எப்படி வந்தது? தமிழன் என்னும் பெயரைக் கேட்டால் குலை நடுங்கிக்கொண்டிருந்தவர்க்கு இன்று நாமேன் அரசியலடிமைகளானோம்? எந்த வடவரசரும் கனவு கூட கண்டிருக்காத நிலை இன்று வடவர்க்கு எப்படியுண்டானது? டில்லிக்கு திராவிடம் ஏன் தலை குனிந்தது? 'என்னை முன் நில்லன்மின் தெவ்விர்' என்ற திராவிடன் வீரம் இன்று எங்கு போய் ஒளிந்தது?

என்னருமை திராவிட மக்களே சற்று எண்ணிப்பாருங்கள். அண்டிப் பிழைக்கவந்த ஆரிய மாயையால்

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# குடி அரசு

4—6—49 சனிக்கிழமை


## இந்த முறை சரிதானா?

இந்திய யூனியன் சுயராஜ்ஜிய ஆட்சியை, மக்களாட்சி அதாவது மக்களே மக்களையாளும் ஜனநாயக ஆட்சி என்பதாக காங்கரஸ்காரர்கள் வருணித்துக் கொண்டு வருகிறார்கள். இந்த 'சுயராஜ்ஜிய' ஆட்சியைப் பார்ப்பன பனியாக்களின் ஏகாதிபத்திய ஆட்சியென்றும், சூத்திரன் என்றைக்குமே தேவடியாள் பிள்ளையாக இருந்து வருவதற்குப் பலமாக அஸ்திவாரம் போடும் ஆட்சி என்றும், திராவிடன் எந்தத் துறையிலும் முன்னேறிவிடக் கூடாது என்கிற வேதத்தின் கூச்சலை நடப்பில் மெய்ப்பிக்கப் போகும் ஆட்சி என்றும் நாம் அடிக்கடி எடுத்துக்கூறி வந்திருக்கிறோம்.

இந்த இரண்டுவகையான கருத்தில் எது உண்மை? எது பொய்? என்பதை நன்றாய்த் தெரிந்துகொள்வதற்கான ஒரு சந்தர்ப்பம் பொது மக்களுக்குத் தரப்பட்டிருக்கிறது இந்திய யூனியன் அரசியல் நிர்ணய சபையினரால்.

இந்த அரசியல் நிர்ணய சபையின் யோக்கியதையைப் பற்றி, அதாவது நாட்டில் 100-க்கு 4-பேர் வோட்டர்களாய் இருந்த ஒரு அமைப்பில், மிரட்டியும், ஏமாற்றியும், வெறியைக் கிளப்பியும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுள், நியமனம் செய்யப்பட்டவர்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் அ. நி. சபையின் தகுதியில்லாமையைப் பற்றி, திராவிடக் கழகம் பல முறை எடுத்துக்காட்டி வந்திருப்பதோடு, இதன் முடிவுகள் திராவிடர்களை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்றும் அறிவித்து வந்திருக்கிறது. என்றாலும் திராவிடக் கழகமோ பிற அரசியல் அறிஞர்களோ எடுத்துக் காட்டிய இந்தக் குறைபாட்டை நீக்க வேண்டுமென்கிற எண்ணம் கொஞ்சமுமின்றி, தன் போக்காகவே காங்கரஸ் மேலிடம், மேலும் மேலும் காரியங்கள் செய்துகொண்டு போகிறதே யல்லாமல், நாளுக்கு நாள் சென்னை போன்ற மாகாணங்களை எப்படி ஆட்டிப் படைத்து, எந்த அளவுக்குக் குதிரைச் சவாரி செய்து, எப்படியெல்லாம் ஒடுக்கலாம் என்பதிலேயே கவனம் செலுத்தி வருகிறது என்பதை விளக்குவதே அரசியல் நிர்ணய சபையில் நிறைவேறியிருக்கும் கவர்னர் நியமன முறை.

இந்த அரசியல் நிர்ணய சபையின் முடிவுகளை ஏற்றுக் கொள்வதற்குக் கொஞ்சமும் நியாயமில்லை என்பதைத் தகுந்த காரணங்களோடு, திராவிடர்களின் சார்பாகத் திராவிடக் கழகம் அறிவித்திருந்தாலுங்கூட, நம்மிடமுள்ள விபீஷண ஆழ்வார்கள்—சிறிய திருவடிகள் எல்லாம் இல்லாத நிலைமை ஏற்படும்வரை, எப்படியாவது கட்டாயமாக நம்மீது அந்த முடிவுகள் திணிக்கப்பட்டுத் தூக்கி வைக்கப்படத்தான் போகின்றன என்பதையும், திராவிடர்களின் போதுமான எதிர்ப்புக்குப் பிறகே—எதிர்ப்பை நல்ல முறையில் மேலிடத்தை உணர வைத்த பிறகே, இந்தப் பொன் விலங்கு உடைத்தெறியப்படும் என்பதையும் திராவிடர்கள் அறிவார்கள். ஆகவே இந்தக் கவர்னர் நியமன முறையை நாம் மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டியதாயிருக்கிறது.

வெள்ளை ஏகாதிபத்தியத்தில், அந்தந்தப் பகுதியிலுள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டோ தேர்ந்தெடுக்கப்படாமலோ அமைக்கப்பட்ட மந்திரி சபையை அல்லது அதுபோன்றதை கண்காணித்துவர ஏகாதிபத்தியத்தின் பாதுகாவலராக—அலங்காரச் சின்னமாகக் கவர்னர்கள் நியமிக்கப்பட்டு வந்தனர். இந்தக் கவர்னர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிசபை அமையுமானால் எப்படி வெறும் பொம்மைகளாக ஆகி விடுவார்கள் என்பதையும், ஏகாதிபத்தியத்திற்கு விரோதமாக, அல்லது சிறுகேட்டைத் தருவதாக இருக்குமானால் அப்போது அந்த மந்திரிசபையை அழித்துத் தனக்கு விரும்பிய பேர்வழிகளில் சிலரை நியமித்துக்கொண்டு தனிக்காட்டு ராஜாவாக, அந்தப் பொம்மைகளே எப்படிச் சர்வாதிகாரிகளாக ஆக முடியும் என்பதையும் கண்டிருக்கிறோம்.

இந்த முறையைத்தான் காங்கரஸ் மேலிடம் முதலில் மாற்ற வேண்டுமென்று விரும்பியது, கவர்னர்களே தேவையில்லை என்கிற உண்மையைத் தெளிவாக உணர்ந்துகொண்டபிறகு. தன் விருப்பம் போல் பிரசிடெண்ட் நியமனம் செய்யக்கூடாது, மாகாண மக்களால் கவர்னர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்; அல்லது மாகாணச் சட்டசபை குறிப்பிடும் நால்வரில் யாரேனும் ஒருவரை இந்திய பிரசிடெண்ட் தேர்ந்தெடுத்து நியமிக்கவேண்டுமென்று.

இந்த விதி—அரசியல் நகல் திட்டத்தில் உள்ள விதி நிறைவேறுமேயானால், சென்னைக்கு ஒரு பவநகர் எப்படிக் கவர்னராய் ஆகவே இந்த விதியையே மாற்றி, வெள்ளையர் காலத்தில் கவர்னர்களுக்குள்ள அதிகார வரம்பை எந்த அளவு நீட்ட முடியுமோ அந்த அளவு நீட்டித்து, வடநாட்டு ஏகாதிபத்தியம் சரிந்துவிடக்கூடாதென்பதற்குப் பலமான அஸ்திவாரம் போட்டு, கவர்னர்களே அந்தந்த மாகாணசர்வாதிகாரிகள், அந்த சர்வாதிகாரிகள் பிரசிடெண்டால் நியமிக்கப்படுவார்கள் என்பதாக அ. நி. சபை முடிவு செய்திருக்கிறது.

இந்தப் பின்யோசனை எதனால்? சென்னை போன்ற மாகாணங்களில், மாகாணம் தனி நாடு ஆக்கப்படவேண்டும் என்கிற கிளர்ச்சி இருக்கிறது; காங்கரஸ்காரர்களே என்றைக்கும் தேர்தலில் வெற்றி பெற்றுக்கொண்டிருக்க முடியாது என்கிற நிலை உண்டாகிக்கொண்டு வருகிறது, கவர்னர்களையும் மக்களே தேர்ந்தெடுப்பதென்றால், அந்தக் கவர்னர் எப்படி நம் ஏஜண்டாக இருந்துவிட முடியும், என்கிற பார்ப்பன—பனியாக்களின் சிந்தனையல்லவா இந்த மாறுதலுக்குக் காரணம்?

கவர்னர்கள் அந்தந்த மாகாணங்களுக்கும் வெளிமாகாணத்தவர்களாய்த்தான் இருப்பார்கள். அவர்கள் பெயரால்தான் மாகாண ஆட்சி நடைபெறும். அவர்களை மத்திய அரசாங்கத் தலைநகரிலுள்ள பிரசிடெண்டுதான் நியமிப்பார். அந்தக் கவர்னர்கள் பிரசிடெண்டுக்குப் பொறுப்பானவர்களே தவிர மக்களுக்குப் பொறுப்பானவர்களல்ல. அந்தக் கவர்னர்களுக்கு மந்திரி சபையை நீக்க, மாற்ற, அல்லது அதன் செயல்களை ஆட்சேபிக்க முழுச் சர்வாதிகார உரிமையுண்டு. ஆனால் இந்தச் சர்வாதிகார உரிமையை, மந்திரிகள் வடநாட்டின் ஏவலாளர்களாய் இருக்குமட்டும் உபயோகிக்க வேண்டிய அவசியமே ஏற்படாது; என்றைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உண்மைப் பிரதிநிதிகள் "மாகாண மக்களின் நலம்", "உரிமை" என்றெல்லாம் பேசுகிறார்களோ அன்றைக்குத்தான் கவர்னர்களின் விசேஷ அதிகாரம் என்கிற சர்வாதிகாரத்துக்கு வேலையுண்டு என்பதாக அறிவித்து முடிவுகட்டியிருக்கிறது அ. நி. சபை.

இதுதான் ஜனநாயக சுயராஜ்ஜிய ஆட்சியா? அல்லது பார்ப்பன பனியாக்களின் ஆட்சியா? என்றால், இந்த முறைதான் சரி என்கிறது நம் திராவிடத் தோழரை (!) ஆசிரியராய்க் கொண்டிருக்கும் தினசரி.

இந்த முறையைச் சரி என்பதற்கு, இன்றையக் காங்கரஸ்காரர்களுக்குள் இருந்துவரும் கோஷ்டிகளை எடுத்துக்காட்டி நிரூபிக்க முயற்சிக்கிறதேயொழிய, இன்றைக்குப்பட்டங் கட்டிவிடப்பட்டிருக்கும் ஜவஹர்லாலையும், பட்டேலையும் மனதில் கொண்டு பேசுகிறதேயொழிய, பட்டேல் ஜவஹர் காலத்திற்குப் பிறகும் இந்த அரசியல் முறை இருந்துவரவேண்டியதாகும் என்கிற எதிர்கால அரசியல் ஞானமோ, மாகாண மக்கள் நலன் விரும்பும் குணமோ தன்னிடம் அறவே இல்லை என்பதை அது நன்றாகக் காட்டிக்கொண்டுவிட்டது.

ஏனென்றால் இப்படிச் செய்யாவிட்டால் மாகாணக் கிளர்ச்சிக்காரர்களுக்கு நல்லதொரு வாய்ப்பாக முடிந்துவிடுமே என்று பெருமூச்சு விடுகிறது தினசரி.

இப்பேர்ப்பட்ட அண்ணாத்தைகள் நம்மிடம் உள்ளமட்டும், அ. நி. சபை முடிவுகள் எப்படி நம்மீது சுமத்தப்படாமல் போய்விடும்? இருந்தாலும் இந்த முறை சரியானதா? என்று நாம் மக்களைக் கேட்கிறோம்.

கோவை மாநாட்டிற்கு

# கைவல்யமவர்களின் செய்தி!

★

திருவாளர் மாப்பிள்ளை பெத்தாம்பாளையத்தார் (வரவேற்புக் கழகத் தலைவர்) அவர்களுக்கு! வணக்கம்.

பெரியாரும் ராஜகோபாலாச்சாரியாரும் திருவண்ணாமலையில் பேசினார்கள். என்ன பேசினார்கள் என்பதில் நமது எண்ணம் செல்லவேண்டியதில்லை. ஆச்சாரியார் அவர்கள் நம்மையெல்லாம் "நாஸ்திகர்கள்" என்றார். அதற்குத் தகுந்த பதிலைப் பெரியாரும் கொடுத்துவிட்டார். அவ்வளவோடு நம் வேலை முடியவில்லை.

ஆச்சாரியார் அவர்களுக்கு "ராமாயணம்" "பாரதம்" முதலிய இதிகாச புராணங்களுக்கு உரை எழுதுவதும், எதற்கும் அதிலுள்ள மேற்கோள்களைக் காட்டுவதும் தொழிலாக இருக்கிறது. இதனால் நம்மையெல்லாம் பகுத்தறிவு அற்ற பாமரர்களாக அன்றைக்கு இருந்ததுபோல என்றைக்கும் இருக்கும்படியாகச் செய்ய நினைக்கிறார். பெரியார் இதிகாச புராணங்களிலுள்ள பொய், புரட்டு, கற்பனை, வஞ்சனைகளை நியாயத்தோடு பொருந்தும்படியாகச் சொல்லி நம்மையெல்லாம் பகுத்தறிவுப் பாதைக்குச் செலுத்திக் கொண்டு போகிறார். ஆச்சாரியாரின் வேலைக்கு வழி செய்வதே திருவண்ணாமலைக் குகைத் திறப்புவிழா! ஆச்சாரியார் இராஜாங்கத்தில் பெரிய பதவியிலிருப்பவர். வேலையும் அந்தஸ்தும் பெரிது. அதை எல்லாம்விட்டு ஏமாற்று ரிஷியைப் புகழவும், ஒரு கோவிலைத் திறக்கவும் திருவண்ணாமலைக்கு வருவதற்குக் காரணம் என்ன என்பதை ஆலோசித்துப் பாருங்கள். இவை வைசிராயின் அந்தஸ்துக்குத் தகுந்ததுமல்ல. எந்த நாட்டிலுமில்லாத நம் நாட்டு விசேடம்.

ஆச்சாரியார் ரமண ரிஷியின் தபசைப் புகழ்ந்து—குகையைப் புகழ்ந்து ரிஷி செய்த தபசாலும் இனி மேல் செய்யும் தபசாலும் சனசமூகத்திற்கும் பின் சந்ததியாருக்கும் நன்மையுண்டாகும் என்று சொல்லுகிறார். நீங்கள் உங்கள் சமூகத்திற்கும் உங்கள் பின் சந்ததியாருக்கும் செய்ய வேண்டியது ஒன்று உண்டு. உண்மை ரிஷிகளுக்குச் சமத்துவம் லெட்சணம். வருணாஸ்சிரம தருமத்தையும், சநாதன தருமத்தையும் விட்டு அகற்ற மேல்பட்டவன். இந்த ரிஷியோ ஊரார் பணத்தை வேஷத்தாலும், பிரசாரத்தாலும், புரோக்கர்களாலும் தேடி, குடும்பத்திற்கும் குலத்தினருக்கும் கொடுத்து, தம்பிக்குச் சர்வாதிகாரம் கொடுத்து, இனியும் தபசென்றும் பிரதிஷ்டை என்றும், கும்பாபிஷேகம் என்றும் உலகததை ஏய்த்து வாழுவது ரிஷித்தன்மைக்கு ஏற்றது அல்லவே அல்ல. இதை நீங்களெல்லாம் தெரிவது போலவே உங்கள் பின் சந்ததிகள் தெரிந்து கொள்ளும்படியாக அழுத்தம் திருத்தமாகச் சொல்லுங்கள். முக்கியமான இடத்தைவிடாமல் விபரத்துடன் சொல்லுகிறவர்கள்தான் பிரசார பிரசங்கிகள் ஆனதால், பிரசங்கிகளில் யாராவது மேடையில் நான் சொல்லும் குறிப்பை பொறுமையாய் விஷயத்தை விடாமல், கடுமையும் கோபமும் இல்லாமல் சொல்லும்படியாய் செய்யவும். சிறிது நாளைக்கு முன் ஆச்சாரியார் படம் போட்டு ஒருபக்கம் அனுமான் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யும் மாதிரியும், மறுபக்கம் கும்பிட்டு ஒடுங்கி வணங்கி பீமசேனன் நிற்கிற மாதிரியும் படம் போட்டு, தேசியப் பத்திரிகைகள் வெளியிட்டிருந்தததே அது என்ன? பார்ப்பாருக்கு நாமெல்லாம் அப்படி இருக்க வேண்டுமென்பதல்லாமல் வேறு என்ன? முக்கியமான இடத்தைத்

# கல்லெறியுங்கள்!

★

“கருநாகத்தைக் கல்லெறிந்து கொல்லுங்கள்”! ஏற்றுக் கொள்வீர்கள் இவ்வாறு கூறினால். கருநாகம் கடவுளென்று கருதுவோரும்கூட தம்மைக் கடிக்க வந்தால் கல்லெடுப்பர், தடியெடுப்பர். இது இயற்கை. இது கற்காலம் தொட்டு மனிதனுக்குச் சூழ்நிலை கற்பிக்கும் பாடம். குகையிலே வாழ்ந்தான் கோவணமின்றித் திரிந்த காட்டுமிராண்டி. சீறும் சிங்கத்தைக் கண்டான், கல்லெடுத்தான். பாயும் புலியைப் பார்த்தான், கல்லெடுத்தான் காத்துக் கொள்ள. அந்தக்கல்லின் பயன் இன்னும் மாறவில்லை. சாக்கியன் கல்லால் சிவனை அடித்தான். சினத்தால் தாக்கவில்லை சாக்கியன். பக்தியின் பழு பரமனைக் கல்கொண்டு வணங்கு என்றது. சாக்கியனின் பூசையிலே புரட்சி சூடமில்லை; கல். அந்த சம்பவம் காட்டிக் கல்லெறியச் சொல்லவில்லை. ‘கல்லெறியுங்கள்!’ என்கிறார் ஆங்கில அறிஞர். அவர் சாக்கியனின் சரித்திரம் காணாதவர். பின் ஏன் இதைக் கூறினார்? நாட்டின் நலத்தை நாடியே கூறுகிறார்.

“வியப்பான வார்த்தை இது. நாடு நலனடைய கல்வீச்சு அவசியமா?” என்று கேட்கலாம். சீரழிவை விரும்பாத சீர்திருத்தவாதி கூறுகிறார், “சிறுவர்களே! கல்லெறியுங்கள்” என்று. சிறுமதி படைத்தவரல்ல, சித்தம் குலைந்தவரும் அல்ல அவர். நாட்டின் நலத்தை நாடி மனிதரின் மேல் கல்லெறியக் கூறுகிறார். மனிதனின்மீது கல்லெறிவது நாட்டு நலத்தை வளர்க்குமா என்று எக்களிக்கலாம். ஆனால் அவரின் அறிவுரை அவரது நாட்டைவிட இங்குதான் அவசியம். எந்த அறிஞன் அவ்வாறு கூறுவது? கோல்டுஸ்மித். இவர்தான் மனிதரை மனிதர் மீதே கல்லெறியுங்கள் என்று கூறும் மனிதன். பாதையிலே போகும் ஒவ்வொருவனையும் அல்ல. “பாதையிலே போகும் பாழான போதை மனிதன் மீது எறி” என்கிறார். மணமாகாத மனிதன் மீது எறி என்கிறார். ‘பிரம்மச்சரியம்’ என்று உலவும் உளுத்த உலுத்தர் மீது எறி என்கிறார். மேடைப்பேச்சாளிமீதல்ல. “கூலிவேண்டும்,” என்று கண்ணீருடன் கூவும் தொழிலாளிமீதல்ல.

எறியும்போது முழக்கமும் வேண்டாமா என்று சிந்தித்தார். ‘ஏய் மனிதனே! மணம் செய்யாது திரியாதே! போ! மணம் செய்!” என்று கூவிக் கொண்டே எறியுங்கள்! என்கிறார். கனல் கக்க கூறுகிறார்; உளம் வெடிக்க உறுமுகிறார்; மெய்துடிக்க முழங்குகிறார். இவ்வாறுகூறி, உறுமி, முழங்கி நாட்டை நலமாக்க முனைகிறார்.

பெண்களை வெறுப்பது போற்றற்குரிய கலையாகக் கருதப்படுகிறது. மங்கையின் மெய்யைத் தீண்டினால் அய்யனின் அடியைத் தீண்டமுடியாது என எண்ணினர். இந்த எண்ணம் மக்களை மந்தமதியினராய் மாற்றிவிட்டது. “அகத்துக்காரி அகத்திலேதான்” என்று பெண்களின் சுதந்தரவாழ்வுக்கு வேலிகட்டிய கூட்டத்தினரால் கொண்டுவரப்பட்ட கருத்து இது. பெண்ணும் சமூகத்தின் உறுப்பினள் என்ற கருத்தை மறந்தனர். பெண்ணே! பாவத்தின் பிறப்பிடம் என்றான் தாடி முடிவளர்த்திய தடியன்! மங்கையின் அழகிலே மயங்காதே என்றான் கஞ்சாவிலே மயங்கிய காவிக் காவாலி! மாயா உலகம் என்றான் பணத்தை எண்ணிக் கொண்டே புரட்டன்! உடல் அநித்தியமென்றான் பஸ்பத்தால் ஊனை வளர்த்திக் கொண்டு பண்டாரம்! இதைக் கூறிக் கொண்டே காடு சென்று கண்ணை மூடிக் கொண்டு தவம் செய்தனர் விசுவாமித்திரனின் பரம்பரை.

பெண்ணுலகு பழிச் சொல்லை ஏற்றது. கண்ணீர் துளித்தது கண்களிலே. பெண்ணினத்தை வெறுத்தாலே பரமபதம் கிட்டும் என்று பாடினர், எழுதினர், பரப்பினர். இதைக் கண்ணுற்று கலங்கினர் பெண்கள். எதிர்த்துப்பேச சூழ்நிலை இடம் தரவில்லை. உள்ளம் பொறுமினர். அவர்களின் பொறுமை “ஏன் இந்த பெண் ஜென்மம்” என்ற அளவுக்கு வெறுப்பை ஊட்டிவிட்டது.

பெண்ணின்றி வாழ்விலே பெருமைப்படலாமென எண்ணினர் பிரம்மசாரியர். இந்த எண்ணம் மணமானவரின் மனதிலும் வளர்ந்தது. அந்த வளர்ச்சிவிபரீதத்தை வளர்த்தது. மனைவியை விட்டனர்; குழந்தைகளைத் தள்ளினர்; வீட்டை வெறுத்தனர்; நாட்டை வெறுத்தனர்; உலகை வெறுத்தனர்; வாழ்க்கையை வெறுத்தனர்; காட்டுக்கு ஓடினர் கண்மூடி வாழ்வு வாழ. கணவன் ஓடிவிட மனைவி கதறினாள். கண்ணனைக் கூப்பிட்டாள், அவனும் வரவில்லை. பருவ உணர்ச்சி அவளை இன்பம் என்ற படகிலே செலுத்தியது. தன் கணவன் அளித்த இன்பத்தை அடைந்தாள் அயலானிடம். பிறந்தது விபசாரம்.

பிரம்மசரியம் வளர்ந்தது. மணமாகாதவர் குவிந்தனர். சிலரால் அடக்க முடிந்தது உணர்ச்சியை. சிலர் முடியாது தவித்தனர். காஷாயம் கொண்டோமே இனி என்ன செய்வது என்று திகைத்தனர். திருட்டுத்தனமாக இன்ப

---

தெரிந்து மனதிலும் உணர்ச்சியுடன் வைத்துக் கொள்ளவேண்டும்.

பழைய முதல் மந்திரி ஓமந்தூரார் ரமணரிஷிக்கு முதல் சிஷ்யர். கைகட்டி வாய்பொத்தி நின்ற சிஷ்யன் கோவில் கட்டினார், கும்பாபிஷேகம் செய்துவைத்தார். ரிஷியும் குகைலிங்கமும் அவருக்கு என்ன செய்தது? துப்புறத் தள்ளியதே தவிர அவரைக் காப்பாற்றவில்லை. “இதெல்லாம் அநித்தியம். உனக்கு மோட்சம் வாங்கித் தருகிறேன்” என்று சொல்லியிருப்பார். அதையும் நம்பித்தானிருப்பார் ஓமந்தூரார். இதைச் சபையில் சொல்லுங்கள்.

எனக்கு உடம்பு சௌக்கியமாயில்லை. மகாநாட்டுக்கு வருவது சந்தேகம். நான் என்ன செய்யட்டும்? தேக நிலை அப்படி. சொக்கலிங்கம் சுப்ரமண்யம் முதல் உங்கள் எல்லா சிநேகிதர்களும் இதைக் கவனிக்கட்டும். எல்லோருக்கும் வணக்கம்.

பாலக்காடு, 26-5-49 } இங்ஙனம், கைவல்யம்.

ரோஜா முத்தையா

மடைய முனைந்தனர் மானத்தை காக்க எண்ணிய பரமனின் பக்தர். பெண்ணையே வெறுத்தோம் என்றனர் பகலிலே. இரவிலே இன்பக் கடலின் ஆழத்தை அளவிட்டனர். கன்னியரின் கற்புப் பறிபோயிற்று- கண்ணீருடன் கதறினர் காமனின் வார்த்தையை நம்பிய பாவைகள். இரவிலே கொஞ்சினானே காப்பாற்ற மாட்டானா என்று பகலிலே சென்றாள், பெயரளவில் பிர்மச்சாரியாக நடித்த பக்தனிடம். அவன் சோதனை என்று கையை விரித்தான். பழிச் சொல்லைச் சூடிக் கண்ணீர் விட்டாள் காரிகை.

பெண்களின் கண்ணீர் மக்களின் மன்றத்திலே பலனளிக்கவில்லை. பிரம்மச்சாரிய சாதுவை நம்பினர், பணமளித்தனர். பண்டாரசன்னிதிகளாக மாற்றினர். பிர்மச்சாரியர் உண்டு கொழுத்தனர். சத்துள்ள ஆகாரம் சல்லாபத்தைச் செய் என்றது. செல்வம் பெட்டியில், சத்துள்ள ஆகாரம், சல்லாபக் குயில் அருகிலே! இந்நிலை பிர்மச்சாரிகளை அதிகரித்தது. பல கனிகளை உண்ண பிரமசாரியம் என்ற போர்வையைப் போர்த்தினர் பாதகர். பண்டார சன்னிதிகளின் சிஷ்யர்களும் குருவின் கொள்கைகளைக் கையாண்டனர். உணர்ச்சியைத் தீர்க்க உருண்டனர். எங்கும் விபசாரம்! எங்கும் கற்பழிப்பு! எங்கும் அக்கிரமம். இவற்றை உண்டாக்கியவர் பாதகப் பிரம்மச்சாரிகள். வேதாந்தம் பேசி நாட்டைக் குலைத்தனர். கன்னிகளின் மடம் கட்டினர். மணமாகாப் பாதிரிகளும் பெண்களும் கட்டிப்புரண்டனர். மடத்தின் மண்ணிலே சிசுக்கள் புதைக்கப்பட்டன. இரகசியமாக இந்நிலை கண்டு வெதும்பிக் கூறினார், "மணமாகாதவனே மணம் செய்து கொள்! மணமின்றி வாழ்ந்து மங்கையரைக் கெடுக்காதே! கல்லெறிவோம்!" என்று.

எங்கும் ஆண் பெண் இருபாலரின் இருதயக்கீதம். வாழ்வின் இன்பத்தையோ துன்பத்தையோ தாங்கத் துணை தேவை. அந்தத் துணை அடிமை போன்றதல்ல. அந்தத் துணை சகல உரிமை பெற்றது. காதல் என்ற கயிற்றிலே கட்டப்பட்டு வானளாவப் பறக்கும் கொடியே மண வாழ்க்கை.

காஷாயமிட்டு காட்டிலே வாழ வேண்டும் என்று சிந்திப்போர் சமூகத்துரோகிகள். இல்வாழ்க்கையின் தொடர்பின்றி வாழ்க்கையிலே சுவையில்லை. ஒவ்வொரு நல்லாட்சி நாடும் இல்வாழ்க்கைக் குன்றுகளால் ஆனவை. நாட்டின் உயிர் இல்வாழ்வு. அதைத் தகர்க்கும் எந்த சக்தியும் முட்டாள்தனமும் பேதமையும் கலந்ததே. ஒவ்வொரு பெண்ணின் குறிக்கோளும் தன் வாழ்வை அமைதியான நீரோட்டத்திலே செல்லச்செய்யும் சீரியோனை மணப்பதே. இதுவே இல்வாழ்வுக் குறிக்கோள். காதலும் மணமும் இல்லா வாழ்வு சூன்யம்.

உலகம் இவ்வாறு நமக்குப் பின்னே அழிந்துவிடக் கூடியதல்ல. வாழ்வு நமக்குப் பின் வறண்ட பாலையாக வேண்டியதல்ல. இதை எண்ணிப் பார்க்க வேண்டும். நமக்குப்பின் நாடு நலனடைய வேண்டும். நமக்குப்பின் நாடு சீருற வேண்டும். ஆதலால் பிரம்மசாரியத்தை வாழ்வு முழுவதும் அனுபவித்து, ஏகாதசியால் ஏகாங்கியாகி சூன்யத்திலே வாழ்வது முட்டாள்தனம். அவ்வாறு வாழ்வோர் இங்கிருப்பதைவிட, இவ்வுலகிலே இருந்து கொண்டு கெடுப்பதைவிட, இவ்வுலகத்தை இடுகாடுகளாக்குவதைவிட, இவ்வுலகத்தைப் பெண்களின் உடல்களால் பரப்புவதைவிட, பரமனின் பாதத்தை அடைய உடனே செல்வதேமேல். அவர்களை நாங்கள் தடுக்கவில்லை. அவர்களை அவர்களின் பரமனும் தடுக்கமாட்டான் என்றே எண்ணுகிறோம்.

எனவே நாடு நலனடைய கூறுகிறார் கோல்டு ஸ்மித் "கல்லெறியுங்கள்" என்று. சித்திரவதை செய்வோம் சிதைக்கும் மணமாகாதாரை என்று சினந்து கூறிவிட்டார், அன்றே கத்தோலிக்க குருமார்களைக் கண்டு. அன்று கூறியது இன்றும் பயன் பெறுகிறது. சீனாவிலே சடைப் புரட்சி தோன்றியது. அதேபோல் கல்லெறிப் புரட்சி தோன்ற வேண்டும் என்கிறார். அவரின் அறிவுச் சொல் அவர் நாட்டுக்கு மட்டுமல்ல; உலகிற்கே!

"கேர்சோன்"

---

(7ம் பக்கத் தொடர்ச்சி)

வந்ததல்லவா இந்நிலை? பழந்தமிழ் செல்வர்களும் அரசர்களும் ஆரிய மாயைக்கு மயங்கியதால் வந்ததல்லவா நமக்கு இவ்விழிநிலை? ஆரியமாயையிலகப்பட்டு மோசம் போயினர் நம் முன்னோர்.

## நமது கழகத்தின் குறிக்கோள்.

நமது கழகம் அரசியலில் ஈடுபடவில்லையே என்பது சிலர் கூறும் குறைபாடு. நாம் இன்றுள்ள நிலைமையில், நமது மக்கள் இன்றுள்ள நிலைமையில், நம் நாட்டின் அரசியலின் போக்கில் இன்று நாம் அரசியலில் பங்கு கொண்டு சாதிப்பது ஒன்றுமில்லை. நமது நிலைமை சீர்படாமல் நம் மக்களுக்குத் திராவிட இனவுணர்ச்சி ஏற்படாமல் நாம் அரசியலைக் கைப்பற்றுவதனால், அரசியலில் பங்கு கொள்வதனால், நமக்கு ஒரு பயனும் ஏற்படாது என்பதைப் பெரியார் அவர்கள் வெட்ட வெளிச்சமாய் விளக்கிக் காட்டிவருகிறார்கள். முதலில் நமது இன இழிவு நீங்கவேண்டும். இன்று நாம் அரசியலில் ஈடுபடுதல் ஒரு சிலர் சட்டமன்ற உறுப்பினராவதற்கும், இரண்டொருவர் அமைச்சர்களாவதற்கும்தான் பயன்படுமேயல்லாமல் நமது குறிக்கோள் ஒரு சிறிதும் கைகூடாது. நம் மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படாது. எனவே, இப்போது அரசியலைப்பற்றிய எண்ணத்தை விட்டு இன இழிவு நீங்க, இன ஒற்றுமையுண்டாக நாம் பாடுபட வேண்டும். மாற்றுக் கட்சியெல்லாம் திராவிட மகன் ஒருவன்கூட இல்லாத கட்சிகளாகும்வரை நாம் அரசியல் பக்கம் தலை வைத்துக்கூட படுக்கக் கூடாது என்பது தாழ்மையான விண்ணப்பம்.

## ஆள்வோர்

ஆளும் கூட்டமாகிய நாம் இன்று ஆளப்படுவோராக உள்ளோம். பேருக்கு நம்மவர்கள்தான் ஆள்கிறார்கள் என்று பெருமையடித்துக்கொள்ளுகிறோம். ஆனால், இன்று நம் மாகாண ஆட்சியாளர் வடவர் கையாளாக இருந்துவருகின்றனர். எதற்கெடுத்தாலும் வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். வடவர் பேச்சுப்படி நமது கழகத்தை, திராவிட இன வளர்ச்சியை அடக்கி ஒடுக்கத் தங்களாலானதெல்லாம் செய்துவருகின்றனர். அன்று பேச்சுரிமை, எழுத்துரிமை என்று கூப்பாடு போட்டவர்கள், ஆட்சிபீடத்திலமர்ந்ததும் அதற்கு எதிர் மாறாக நடந்துவருகின்றனர். நம் மக்கள் வாழ்வு எந்நிலைமையிலுள்ளது!

உணவுப் பஞ்சம், உடைப் பஞ்சம், சுமக்கமுடியாத வரி. ஆங்கிலேய ஆட்சி ஆயிரம் மடங்கு மேல் என்னும் நிலைமையில் உள்ளது. இதற்குக் காரணம் என்ன? தென்னாட்டுப் பண்பாடும் வடநாட்டுப் பண்பாடும் வெவ்வேறு. இதை வடநாட்டுத் தலைவர்களே ஒத்துக்கொள்கிறார்கள். நம் பண்பாடறியாத வடவர் கையில் நம் நாட்டாட்சியிருப்பதே இவ்விழிக்கத்தக்க இழிநிலைக்குக் காரணமாகும். இந் நிலைமை மாறவேண்டுமானால் திராவிடநாடு தனி நாடாக வேண்டும். அதுவரையிலும் இந்நாட்டையாளும் அநுமார், விபீஷணர்களால் படுதொல்லைப்பட்டுத்தான் தீரவேண்டும். உடன்பிறந்தே கொல்லும் நோய் போன்ற நம் ஆட்சியாளராகிய உட்பகைவர்களுக்குத் திராவிட இனவுணர்ச்சி யுண்டாகும்படி செய்யும் அவ்வளவு வேலை, இனிமேல்தான் நமது கழகம் செய்யவேண்டியிருக்கிறது. ஆள்வோர் செய்யும் கொடுமையைப் பொறுத்துக்கொண்டு ஆவன செய்யவேண்டும்.

## கருப்புச் சட்டை.

நமது கழகக் குறியான கருஞ்சட்டையின் பெருமையைக் கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் உணர வேண்டும். இன்றுள்ள இழிநிலையிலிருந்து நாம்விடுபடும் இனவுணர்ச்சியைநமக்கு ஊட்டி நம்மை நல்வாழ்வு வாழ்விப்பது கருப்புச் சட்டையேயாகும். திராவிட இனவுணர்ச்சியூட்டும் கருவியாக கருப்புச் சட்டை உள்ளது. கருப்புச் சட்டை போட்ட ஒருவரைக் கண்டதும் நமக்கு உடனே நாம் ஒரே இனம், இவர் நம்மினம் என்னும் இனவுணர்ச்சி தானாகவே உண்டாகிறது. இது இனவுணர்ச்சியூட்டும் கருவி! இழிவு நீக்கும் போர்ப்படை! திராவிட மக்களை ஒன்றாக்கும் தூதுவன்! என்பது விளங்குகிறதல்லவா? கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் தம் குழந்தைகளுக்குக் கருப்புச் சட்டையேயணிய வேண்டும். அவ்வாறு செய்தால் அவர்கள் இயல்பாகவே கருப்புச் சட்டைக்காரர்களாகி விடுவார்கள்.

## முடிவுரை

நாம் கூடிக்கலையும் ஒரு கூட்டமாக இம்மாநாட்டைக் கருதக் கூடாது. பலரும் ஒன்றுகூடி இனவுணர்ச்சி பெறும் இடமாகக் கருத வேண்டும். தலைவர்கள் பேச்சை ஒவ்வொருவரும் கருத்துடன் கேட்க வேண்டும். மாநாடு இனிது நடைபெறவேண்டும் என்னும் பொறுப்புணர்ச்சி ஒவ்வொருவர்க்கும் ஏற்பட வேண்டும். அமைதியாகவும், பொறுப்புணர்ச்சியுடனும் இருந்து மாநாட்டை வெற்றியுடன் நடத்தித்தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்வதோடு, ஏதாவது குறைபாடுகளிருப்பினும் பொருட்படுத்தாது எங்களைப் பெருமைப் படுத்த வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக் கொண்டு மறுமுறையும் அன்போடு வரவேற்கிறேன்.

இங்கர்சால் சொற்பொழிவு.

# ஒரு நன்றி கூறும் நடப்பு!

தமிழாக்கம்:— நெடுஞ்சேரலாதன்.

அவர்கள் வியாபாரத்திற்கான எல்லா ஆயுதங்களையும், உழைக்கும் வழிகளையும், கற்றுக்கொடுத்தார்கள். அவர்கள் சிலைகளைச் செதுக்கியும், ஓவியங்களை வண்ணங் குழைத்தும் 'உலகை ஜால மயமாக்கி,' வழியும் வண்ணமுமாக்கினார்கள். பல புரியாத மனித தசையையும், மூளையையும் பாதிக்கும் நோய்கட்கான காரணங்களையும், அதை நீக்கும் முறைகளையும் கண்டுபிடித்தார்கள். அவர்கள் இசைக் கருவிகளைக் கண்டுபிடித்து, பெரும் கவிகளையும் பாடகர்களையும் கொண்டு, வெறும் காற்றை இசையாகவும், இனிமையாகவும் மாற்றி, மயங்கவும், மகிழவும், எண்ணங்களைத் தூய்மைப்படுத்தவுமாக அமைத்துக் கொடுத்தார்கள்.

பயம் என்ற சிறையினின்றும் நம்மை வெளியேற்றினார்கள்; தெய்வீக அடைப்பு—அணைப்பு என்ற பயங்களை ஊர்ந்து வளைந்து பறக்கும் மிருகங்களிடமிருந்து நம்மை மீட்டுவிட்டார்கள். அவர்கள் நமக்குச் சிந்திக்கும் உரிமையைக் கொடுத்து, வெளியிடும் வீரத்தையும் கொடுத்தார்கள். அவர்கள் பயந்தோர்களை-அடிமைகளை— முழந்தாளிலிருந்தோரை—குப்புற வீழ்ந்தோரை, மாந்தர்களாக-மாதர்களாக ஆக்கி; நியாய அறிவிலே சேர்த்தி, அவர்களை உண்மையான விடுதலை காணுமாறு செய்தார்கள். அவர்கள் தோற்றங்களின் முடி கழற்றி அய்யம் கொண்டோரைப் பேய்களிடமிருந்து காப்பாற்றி, இந்த உலகை மக்கட் குழந்தைகட்காக ஆக்கிக் கொடுத்தார்கள். அவர்கள் மக்களிதயத்தினின்றும் பேய்ப் பயத்தை நீக்கி, நரகத் தீயை அணைத்துவிட்டார்கள்.

பெரும் ஓலைச் சுவடிகளின் ஒருசிறு பாகத்தைப் படித்தார்கள்; கல்லெழுத்துக்களை, ஒய்வற்ற கைகளினால், மங்கிய இருண்டகால நேரங்களையெல்லாம் ஒழுங்கு செய்து உருவகப்படுத்தினர். காற்றாலும், திசையினாலும், நெருப்பாலும், பனியாலும், வாழ்வாலும், மரணத்தாலும், நிறுத்தமற்ற தொழிலாளிகளாலும், ஒப்பற்ற உலக சக்திகளாலும் யாது நிகழ்ந்தன என்பதை நமக்கு அறிவித்துள்ளார்கள்.

அவர்கள் நாமறிந்த துருவங்களைப் பெரிதாக்கி, சிறு அணுப்போல் நமக்கு மேலே—சுழலும் உலகின் மேலே ஒளிர்ந்து கொண்டிருந்தவைகளை மாற்றி, வான வெளியிலே எண்ணிலாச் சூரியர்களை நிரப்பிக் காண்பித்தார்கள். அவர்கள் பொருட்களின் தன்மைகளை—இயற்கையின் உண்மைகளை உணர்த்தி, எப்படிப் பிரிப்பது எப்படி சேர்ப்பது என்பதையும், நன்மைகளைப் பயன்படுத்திக் கொள்ளவும், தீமைகளை நீக்கவும் கண்டு கூறினார்கள்.

அவர்கள் நமக்குப் பெரும் வழிகளான கணிதங்களைக் கற்பித்து அவை மூலமாக வானவெளியையும், தாரகைகளின் தொலைவையும், கிரகங்களின் சுழற்சியையும், அவைகளின் பருமனையும், எடையையும் உணருமாறு செய்து அவைகளின் பலனாக பயனற்ற அபாயமான கடலிலே கலம் செலுத்தவுமாக வழி கற்பித்தனர். இலக்கியம் கலை ஆகியவைகளைப் பற்றிய அறிவுயாவும் அவர்களே கொடுத்தார்கள். அவர்கள் கடினமற்ற—வசதி—செலவு ஆகியவைகளால் உலகை நிரப்பிவிட்டனர்.

(தொடரும்)

குடி அரசு



[4ம் பக்கத் தொடர்ச்சி]

தில் அமையும் அரசியல் அமைப்பு மன்றம் இருக்காது' என்று உறுதியாகக் கூறலாம். புதிய திராவிடத்தின் அரசியல் நகல் தயாரிக்கப்பட்டவுடன், மாகாண சட்டசபைகளின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டு, மக்களின் சம்மதத்தையும் பெற்றவுடனேயே அவை சட்டமாக்கப்பட்டு அமுலுக்குக் கொண்டுவரப்படும். இந்தச் சந்தர்ப்பத்தில், ஒரு வட்டாரம் இந்த அரசியல் அமைப்பை ஏற்றுக்கொள்ள மறுத்து, தனித்திருக்க விரும்பினால் அதற்குப் பூர்ண உரிமையுண்டு. இப்படித் தனித்துப் போக விரும்பும் ஒன்று, அல்லது அதற்கு மேற்பட்டவைகள் நீங்கலாக மீதியுள்ள பகுதிகளைக் கொண்ட சமஷ்டி அமைக்கப்படும். பிரியவேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டால் இந்த முறையைப் பின்பற்றுவதுதான் சிறந்தது. இப்படிப் பிரிந்துபோகும் நாடுகள் பிற்காலத்தில் சேர்ந்துகொள்ள விரும்பினால் தாராளமாக அனுமதிக்கப்படும்.

ஆனால், இந்த நான்கு வட்டாரங்களில் ஏதாவது ஒரு பகுதி ஆரம்ப காலம் முதற்கொண்டே பிரிந்து, வடநாட்டுத் தொடர்பிலேயே இருக்க விரும்பினால் இதனுடைய பிற்போக்குக் கொள்கையைக் கண்டு நாம் வருந்துவது தவிர வேறென்ன செய்ய முடியும்? இவ்வளவு வடிகட்டின பிற்போக்கு வாதிகள் திராவிடத்தின் அரசியல் வட்டாரத்தில் இருக்கமாட்டார்கள் என்றுதான் கருதுகிறேன். இதுபோலவே எல்லா நாடுகளும் தனித்தனியாகவே இருப்பதை எல்லோரும் விரும்பமாட்டார்கள் என்றுதான் எதிர்பார்க்கிறோம். இதற்கு ஆதாரமானது முறையில்தான் சமீபத்தில் வெளியிட்ட சி. ஆர். ரெட்டி அவர்களின் கருத்தும் உள்ளது—இதுபோலவே சில மலையாளத்தலைவர்களும் சமீபத்தில் வெளியிட்டுள்ள கருத்துக்களைக் கொண்டுபார்க்கும்பொழுது, திராவிடத்தில் ஒரு கூட்டு ஆட்சிமுறை ஏற்படும் என்ற நம்பிக்கை உண்டாகிறது. ஆனால் அது சமஷ்டியாகவிருக்குமா? அல்லது சம்மேளனமா என்பதைத் தான் வரையறுத்துக் கூறமுடியாது.

## தமிழ்நாட்டில் திராவிடஸ்தான்.

திராவிட நாடு என்று நாம் குறிப்பிடும் நான்கு வட்டாரங்களில், தமிழகம் நீங்கலாக ஏனையவைகள் தனித்திருக்கவேண்டும் என்ற விருப்பத்தினாலும், வடநாட்டுத் தொடர்பிலேயே இருப்பது என்ற பிற்போக்குக் கொள்கையைப்பின்பற்றுவதினாலும்ஒருகூட்டாட்சி ஏற்படுத்துவதுசாத்தியமற்றது என்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவிட்டால், நம்மைப் பொறுத்தமட்டில் தமிழ் நாட்டில் மட்டுமாவது திராவிடஸ்தான் ஏற்படுத்தியே தீருவோம்! திராவிடஸ்தான் என்பது நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும் ஆட்சி அல்ல; அது ஒரு இன அரசு. திராவிட இனம் என்று தங்களைக் கூறிக்கொள்பவர்கள் எவ்வளவு சிறிய நிலப்பரப்பில் தங்கள் ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டாலும் அந்த இடம் திராவிடஸ்தான்தான். அங்கு அமைக்கப்படும் ஆட்சி திராவிட ஆட்சிதான்.

உதாரணமாக 'அயர்லாந்துகுடியரசு' என்பதை எடுத்துக் கொண்டால் அது முழு அயர்லாந்தையும் குறிப்பிடாது. அயர்லாந்தின் முக்கால் பாகம்தான் குடி அரசாக உள்ளது. அல்ஸ்டர் மாகாணம் என்று வழங்கப்படும் வட அயர்லாந்து இன்னமும் பிரிட்டனின் ஆதிக்கத்திலேயே இருந்து வருகிறது. அதுமட்டுமல்ல, அயர்லாந்து மக்கள் சுதந்தரத்திற்காகப் போராடிய காலத்தில் இவர்கள்—அல்ஸ்டர் வாசிகள்—அயர்லாந்துக்குச் சுதந்தரம் கொடுக்கக்கூடாது என்று கூறியும்—அதற்காகப் போராடியும் வந்தார்கள். அல்ஸ்டரில் உள்ளவர்கள் பிரிட்டானியர்களைப் போல் "பிராடஸ்டெண்ட்" மதத்தினர்களாகவும், அவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்களாகவும் இருந்ததுதான் காரணம். ஆயினும், இவர்கள் முயற்சி பலிக்காமல் போய் அயர்லாந்து குடியரசு அமைந்துங்கூட இவர்கள் பிரிட்டனின் ஆதிக்கத்திலேயே இருந்து வருகின்றனர். இதை ஏன் இங்கு குறிப்பிடுகிறேனென்றால், யாரோ சிலர் தடுத்து விடுவதினால் திராவிடநாடு ஏற்படுவதைத் தடுத்துவிட முடியாது என்பதற்காகவும், கிடைக்கும் பகுதியில் திராவிடஸ்தான் ஏற்படுத்திக் கொள்வது நியாயமானது என்பதற்காகவும்தான்.

தற்பொழுது இந்தியாவில் ஏற்படவிருக்கும் "இந்திய குடியரசு" என்பதும்,இந்தியா முழுவதையும் குறிப்பிடுவதாக இருக்க முடியாது. பிரிந்துபோன பாகிஸ்தான், இந்தியாவிலுள்ள போர்த்துக்கீசிய பகுதிகள், பிரஞ்சு இந்திய பிரதேசங்கள் நீங்கலாகத்தான் இந்தியக் குடியரசில் அடங்கியவைகளாக இருக்கும். இதைப் போலத்தான் திராவிடஸ்தான் சர்க்காரும் அதற்குக் கிடைக்கும் பகுதியில் அமைக்கப்படும். நிலப்பரப்பில் மாறுதல்கள் ஏற்படுமானால் அதைத் திராவிடநாடு அல்ல என்று மறுக்க முடியாது. உலகில் விடுதலைக்காகப் பாடுபட்ட ஒவ்வொரு நாடுகளும் தங்களுக்குக் கிடைக்கும் பகுதிகளில்தான் தங்களின் இலட்சிய பூமியை நிறுவிக்கொள்வது வழக்கமாகவும் இருந்து வருகிறது.

திராவிடநாடு கேட்கும் நாம் அதன் எல்லைகளையும், நிலப்பரப்பையும் குறிப்பிடும் பொழுது, தென்னிந்தியா, அல்லது சென்னை மாகாணம் என்று சொல்லுகிறோம். ஆனால் ஒரு சிலருக்குச் சந்தேகம் எழக்கூடும். "ஆரிய நாகரீகத்திற்குமுன் திராவிட நாகரீகம் இந்நாடு முழுவதுமட்டுமின்றி மெசப்படோமியா, ஈரான் போன்ற நாடுகள் வரையிலும் பரவியிருந்தது" என்று அறிஞர் சண்முகம் கூறியிருப்பதிலிருந்தும்,

"பீஹார், ஒரிஸா மாகாணங்களைச் சேர்ந்த சிலவிடங்களில் பேசப்படும் "ஓரோவன்" மொழியும், ஒரிசா மலையடிவாரங்களில் வசிக்கும் கோண்டர்களால் பேசப்படும் "கோண்டு" மொழியும், வங்காள பிரதேசத்திலுள்ள ராஜ்மஹால் மலைகளில் வாசம் செய்யும் "மாலர்"களால் பேசப்படும் "ராஜ்மஹால்" என்ற பாஷையும் திராவிட மொழிகள் என்று மொழியாராய்ச்சிவல்லுனர்கள் முடிவுகட்டியிருப்பதாகவும், சிந்து மாகாணத்தில் மொஹென்ஜோதாரோ, ஹரப்பா முதலியவிடங்களில் கிடைக்கப்பெற்ற புதைபொருள்ஆராய்ச்சியின் மூலமாகவும், பெலுச்சிஸ்தான் மக்களில் 20 லட்சம் பேர் திராவிட மொழியாகிய "பிரஹுய்" மொழி பேசுவதிலிருந்தும், திராவிட ஆட்சியேஇந்தியா முழுவதிலும் பரவியிருந்தது எனவும், தமிழ், தெலுங்கு, கன்னடம், ராஜமஹால், ஓ ரோ வ ன், பிரஹுய், துளுவு, குடகு, கோடா, கோண்டு, மலையாளம், தோடா, ஆகிய மொழிகள் திராவிட மொழிகள் தானென்றும்," "பாகிஸ்தானும் திராவிடஸ்தானும்" என்ற கட்டுரையில் (நகரதூதன்) விளக்கம் கூறியிருப்பதையும் கொண்டு பார்க்கும் பொழுது, ஏன் நாம் இந்தியா முழுவதையும் திராவிடம் என்று குறிக்கக் கூடாது என்ற சந்தேகம் ஏற்படக்கூடும். வருங்காலத்தில் சிலபல நூற்றாண்டுகளுக்கு பின்னர் இதுபோன்ற நிலை ஏற்பட்டாலும் ஏற்படலாம்.

திராவிடர்களுடைய சிறப்பிற்குரிய ஆட்சியும், கலை நாகரீகங்களும் இந்தியா முழுவதும் பரவியிருந்தன வென்ற போதிலும், தென்னிந்தியாவைத்தான் திராவிடம் என்றும், தென்னிந்தியர்கள் திராவிடர்கள் என்பதாகவும் சரித்திர ஆசிரியர்களும், மனித வர்க்க ஆராய்ச்சியினரும் கூறியிருக்கிறார்கள். தென்னிந்தியாவின் பிரதான மொழிகளாகிய தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவைகள் திராவிடமொழிகள் என மொழியாராய்ச்சி வல்லுனர்களும் முடிவுகட்டி கூறியிருக்கிறார்கள். திராவிடம், திராவிடமொழி ஆகியவைகளைப்பற்றி கூறும் அனைவரும் தென்னிந்தியாவைமட்டும்குறிப்பிட்டுக் கூறியிருக்கிறபடியாலும், நாம் திராவிட நாட்டிற்கு

எல்லைகட்டும் பொழுது தென்னிந்தியா என்று குறிப்பிடுகிறோம்.

தென்னிந்தியாவை மட்டும் திராவிடநாடு என்றும், இங்கு வழங்கப்படும் மொழிகளைமட்டும் திராவிட மொழிகள் என்றும் பிரித்து கூறுவது சரியா என்று விரிவாக ஆராய்ந்து பார்த்தால், இந்த கருத்து மிகவும் சரியானது என்பது நன்கு விளங்கும். தென் இந்தியாவில் வாழும் திராடர்களுக்கும், வடஇந்தியாவில் திராவிட மொழிகள் பேசுவோர்களுக்குமிடையில், வேற்றுமைகள்மிகுதியாகக் காணப்படுகின்றன. தென்னிந்தியத் திராவிடர்கள் வேற்று இனங்களோடு கலப்படையாமல் பெரிதும் தனித்தே இருந்துவருபவர்கள். இங்குள்ளவர்கள் தங்களுடைய புராதனமான நாகரீகத்தைப் பண்பற்றி வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டு, அதைப்பேணி வளர்ப்பதில் அக்கறை கொண்டிருப்பவர்கள். ஆனால் வடஇந்தியாவில் திராவிட மொழிகள் பேசுவோர்கள் பிற இனங்களோடு கலந்து பெரிதும் திரிபு அடைந்துவிட்டார்கள். அங்குள்ளவர்களின் நாகரிகம், பண்பாடு போன்றவைகளைப் பிரித்துக்கூறமுடியாத அளவு மாற்றம் ஏற்பட்டுவிட்டது. காரணம்; அங்கு அரசுகள் அடிக்கடி மாற்றி அமைக்கப்பட்டு வந்ததும், சில முஸ்லீம் அரசர்கள் கத்திமுனைக் காட்டி பல இனத்தவர்களை வலுக்கட்டாயமாக முஸ்லீமாக மதமாற்றியதினாலும், உள்நாட்டில் அடிக்கடி பெரும்பெரும் சண்டைகள் நிகழ்வது, குழப்பங்கள் காரணமாக எதிர்பாராத விதமாக திடீரென இடமாறவேண்டிய சூழ்நிலை ஏற்படுவது போன்ற நிகழ்ச்சிகள் பல நூற்றாண்டுகள் தொடர்ந்து நடைபெற்று வந்ததால், அங்கு பல இனங்களிடையே பிரித்துக்கூற முடியாத அளவு கலப்பு ஏற்பட்டுவிட்டது என்று கூறுகிறோம். ஆனால் தென்நாட்டு மக்களோ, என்றுமே அமைதியாகவும் தனித்தும் வாழ்ந்து வருபவர்கள் என்பதைச் சரித்திரம் விளக்கும்.

தென்நாடுதான் திராவிடம் என்பது பலதிறப்பட்ட அறிஞர்களின் கருத்துமாகும். எனவேதான் தென்நாடு, வடநாடு என பிரித்துக்கூறி, வடவர்களின் அரசியல், பொருளாதார ஆதிக்கத்திலிருந்து, தென்நாடு விடுதலை பெறவேண்டும் என்று விழைகிறோம். தென்நாட்டிலுள்ள ஒரு அடிமண்கூட வேற்று நாட்டவனின் ஆட்சிக்குட்பட்டிருப்பதை நாம் ஒருநாளும் அனுமதிக்கமாட்டோம்.

இந்தியாவில் பிரிட்டனின் ஆதிக்கம் இரண்டுவகைகளில் நடைபெற்று வந்தது. ஒன்று பிரிட்டனின் நேரிடை ஆட்சிகுட்பட்டிருந்த பிரிட்டிஸ் இந்தியாவாகவும்; மற்றொன்று பிரிட்டனின் மறைமுக ஆட்சிக்குட்பட்டிருந்த சுதேச சமஸ்தானங்களாகவும் இருந்தன. இந்தியாவிற்குக் குடியேற்ற நாட்டந்தஸ்து வழங்கப்பட்ட பொழுது, சில சமஸ்தானங்கள் பிரிட்டனின் நேரிடைத் தொடர்பிலேயே இருக்கவும், சில தனிசுதந்தர நாடுகளாகவும் எவ்வளவோ முயற்சித்தும் முடியாமல்போய் இன்று இந்திய சர்க்காரின் தொடர்புடையதாக உள்ளன. ஆட்சி ஒழுங்குடனும் செவ்வையாகவும் நடைபெற இந்த ஏற்பாடு இன்றியமையாதது தான். இதைப்போலவே திராவிடநாடு தனியாகப் பிரிக்கப்படும் பொழுது, அதன் எல்லைக்குட்பட்டிருக்கும் சுதேச சமஸ்தானங்களைத் திராவிட சர்க்காரின் அதிகாரத்திற்குட்பட்டதாக மாற்றியமைக்கப்பட வேண்டும். பின்னர் குடியரசு அமுலுக்கு வந்தவுடன் மன்னராட்சியை நீக்கி, அங்கு மக்கள் ஆட்சி ஏற்படச் செய்து, அவைகள் திராவிடச் சமஷ்டியில் அங்கம் வகிக்தும் பூர்ண சுயேச்சையுள்ள தனி நாடுகளாக்கப்படும். இதுபோலவே திராவிடத்தின் எல்லைக்குட்பட்டிருக்கும், பிரஞ்சிந்தியப் பகுதியையும், போர்த்துக்கீசியப் பிரதேசக்தையும் திராவிடத்துடன் இணைக்கவேண்டும்.

வருங்கால திராவிடம் உலகக் குடியரசு நாடுகளிடையே தலை சிறந்ததாக விளங்கவேண்டும் என்பது நமது இலட்சியம். இந்த உயர்ந்த இலட்சியத்தின் உண்மையை அறிந்துகொள்ள முடியாத உலுத்தர்களின் சதிச்செயல்களினாலும், தேசீய போதையில் மூழ்கிக்கிடப்போரின் தெகுடுதத்தத்தினாலும் நமது கோரிக்கை முழுப் பலன் அழிக்காது போய்—அதாவது நாம் குறிப்பிடும் பகுதிகளையுடையதாக திராவிடநாடு அமைக்கமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு, தமிழ்நாடுமட்டும் கிடைக்குமானால், இன்றில்லாவிட்டாலும் நாளை, நமது இலட்சியக்கனவு முழுவெற்றி பெறும் என்ற நம்பிக்கை மீது, தமிழகத்தில் திராவிடஸ்தானை ஏற்படுத்தியே தீருவோம். இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் விடுதலை வேட்கையை எவராலும் தடுக்கமுடியாது. பிரிவினை கண்டிப்பாக நிகழ்ந்தேதான் தீரும். விடுதலைக்காகப் போராட—பச்சை இரத்தம் பரிமாறவும்—ஒவ்வொருவரும் உறுதி கொள்வோமாக!

வாழ்க திராவிடம் "புத்ததாசன்"

---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கம் என்று சொல்லிவருவதெல்லாம் எளியோரையும், பாமர மக்களையும் அடிமைத் தனத்தில் இருத்திவரப் பயன்படுத்தக்கூடிய சூழ்ச்சி ஆயுதமே தவிர, மற்றபடி அது மக்கள் சமதர்மத்துக்குப் பயன்படக்கூடியது அல்லவென்றும் சொல்லுவதற்காகவே எடுத்துக்காட்டுகிறோம்.

உண்மையிலேயே ஒழுக்க ஈனம் என்பது ஒன்று உண்டென்றும், அது திருட்டு, பொய், ஏமாற்றம் போன்றதாகிய குணங்கள்தான் என்றும் சொல்லுவதாய் இருந்தால், அந்தக் குணங்கள் பெரிதும் நிலையாய்க் குடிகொண்டு இருக்கும் இடங்கள், அரசர்கள், குருமார்கள், வியாபாரிகள் வக்கீல்கள், தேசியவாதிகள் போன்ற கூட்டத்தார்களிடமே ஆகும்.

மனிதர்களுக்குத் துன்பமிழைத்து, அவர்களது அமரிக்கையைக் கெடுத்து ஏமாற்றி வஞ்சித்து வாழும் கூட்டங்கள் மேற்கண்ட கூட்டங்களேயாகும்.

இது அந்தந்தத் துறையைக் கைக்கொண்ட ஆட்களை மாத்திரமல்லாமல், அந்தந்தத் துறைகளுக்கே ரத்தமும், சதையும், எலும்பும் போலக் கலந்திருக்கும் காரியங்களுமாகும்.

இந்தக் கூட்டத்தாரைக் கண்டு எந்த மகனும் அருசைப்படுவதேயில்லை. இவர்களிடத்தில் மக்கள் வெறுப்புக் காட்டுவதுமில்லை. அதற்குப் பதிலாக, இந்தக் கூட்டத்தாருக்குத்தான் நாட்டிலே மக்களிடம் செல்வாக்கும் மதிப்பும், இருந்துவருகின்றது. மனித சமூகத்திற்கு எலும்புருக்கி வியாதி போன்ற இந்தக் கூட்டம் மக்களிடம் ஆதிக்கம் செலுத்தி வருவது என்பது மக்களின் அறிவீனத்தையும் பலமற்றதன்மையையும் காட்டுவதல்லாமல் வேறில்லை.

வாழ்க்கைத் துறையின் ஒழுக்கம்தான் இம்மாதிரி இருக்கிறதென்றால் மற்றப்படி, பக்தி, பரமார்த்தீகம் ஆத்மார்த்தம், ஆசாரத்துவம், மகாத்மாத்துவம் என்பவை முதலான துறைகளிலாவது ஒழுக்கம் என்பதைக் காணமுடிகின்றதா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

அவையும் இப்படித்தான் இருக்கின்றன என்பதே நமது அபிப்பிராயம்.

ரோஜா முத்தையா

[2ம் பக்கத் தொடர்ச்சி]

கூடப் பரிட்சையில் தவறாமல் தேறி, ஹைஸ்கூல் படிப்பை முடிக்க அவனுக்கு வயது 17 ஆகிவிடும். சிலருக்கு 18ம் ஆகும். 20க்குக் கூட எட்டிப் பார்த்துவிடும். மேலும் அம்மாணவன் கல்லூரிப் படிப்பை முடிக்க 17-ம் 6-ம் 23 வருட மாகிவிடும்.

ஆனால் நம் நாட்டில் ஒரு மனிதனுடைய சராசரி வயது 25 என்று கணக்கிட்டிருக்கிறார்கள். 23 வயதில் கல்லூரிப் படிப்பை முடிக்கும் மாணவன் நாட்டிற்குப் பொதுத் தொண்டு செய்வது எப்பொழுது? இல்லறத்தில் ஈடுபடுவது எப்பொழுது? ஆகவே காலத்திற்கு ஏற்றாற்போல் கல்வியின் காலத்தையும் நிர்ணயிக்க வேண்டும்.

அடுத்தாற்போல் மூடப்பழக்கவழக்கங்களில் மூழ்கிக்கிடப்பவர்கள் நம் நாட்டுப் பெண்மணிகள். தற்காலம் வகுக்கப்படும் கல்வித்திட்டம் பெரிதும் 'பெண்கல்வியைப்' பேணுதலாக இருத்தல்வேண்டும். பெண்களை வெறும் அடுப்பூதிகளாகவும், படுக்கை அறைப் பொம்மைகளாகவும் எண்ணாமல், ஆண்களுக்கு உள்ள உரிமை அனைத்தும் பெண்களுக்கு உள்ள முறையில் அமைதல் வேண்டும். அதுதான் 'காலத்திற்கேற்ற' கல்வித்திட்டமாகும்!

பெண்களிடம் அறிவுவளராவிட்டால் நம் நாடு கண்டிப்பாக முன்னேற முடியாது. குடும்பத்தலைவிபெண். அவள் அறிவற்றவளாக இருந்தால், அவளுக்குப் பிறக்கும் குழந்தைகளும் அறிவற்றவர்களாகத்தான் இருக்க முடியும். தாய்க்கே 'தாய்மொழி' தெரியாவிட்டால் சேய்க்குத் 'தாய்மொழிப் பற்றைப் பற்றியும், தாய்நாட்டுப் பற்றைப்பற்றியும் கேட்க வேண்டுமா? படிக்காதபெண், படித்த ஆணுடன் இருந்து இல்லறம் நடத்துவது என்பது ஒருக்காலும் இனிக்காது—எட்டிக்காயாகத்தான் இருக்கும். பெண்களிடம் கல்விபரவாவிட்டால் "நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்" என்பதை ஏட்டில் காணலாமேதவிர, நாட்டில் பார்க்கவே முடியாது. ஓரிரண்டுபெண்கள் வேண்டுமானால் புத்தக அறிவு இல்லாவிட்டாலும், இயற்கை அறிவைக்கொண்டு இன்பமாக வாழ முடியுமேதவிர, எல்லாப்பெண்களும் அவ்விதம் வாழ முடியாது. ஆகவே பெண் கல்வியைப் பெரிதும் பேணக்கூடியதாக இருக்க வேண்டும் தற்காலத்திய கல்வித்திட்டம்.

ஆனால் தற்பொழுது இல்லறத்தில் ஈடுபட்டிருக்கும் படியாத பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் 'வானொலி' மூலமாகவும், படக்காட்சி மூலமாகவும் கல்வியைப் போதிக்கலாம்.

தற்பொழுது வகுக்கக்கூடிய கல்வித்திட்டத்தில் ஆண், பெண் பேதத்தை சிறுவர்கள், சிறுமிகள் உள்ளத்தில் புகாத முறையில் கல்வி முறை அமைதல் வேண்டும். மேலும் அத்தகைய பாடபுத்தகத்தில் ஆடம்பர ஆசை, முதலாளித்துவக் கொள்கை, சாதிவேற்றுமை, மதபோதனை போன்றவைகள் அறவே இல்லாமல் அகற்றப்படவேண்டும்.

அறிஞர்களின் வாழ்க்கைவரலாறு, நாட்டுக்குழைத்த உத்தமர்களின் உயிர் ஓவியங்களுடன் கூடியதாக இருக்க வேண்டும் கல்வித்திட்டம்.

தற்காலம் பூமிதட்டை என்றுகூறும் புராணங்களும், பூமி உருண்டை என்று கூறும் விஞ்ஞானப்பாடங்களும் கலந்தே போதிக்கப்படுகின்றன. இதில் மாணவன் எதை நம்புவான்?

முதல் பீரிடில் பூமி தட்டை என்று போதிக்கிறார் தமிழாசிரியர். சான்று காட்டுகிறார் புராணத்தை, இரண்யாட்சதன் பூமியைப்பாயாக சுருட்டிக் கொண்டு போய்க் கடலில்போட்டுவிட்டான்; மகாவிஷ்ணு பன்றி உருவம் எடுத்து பூமியை மேட்டுக்குக்கொண்டு வந்தார்! என்று.

அடுத்த பீரிடு பூகோள ஆசிரியர் வருகிறார் 'பூமி உருண்டை. பூமி உருண்டையாய் இருப்பதால் தான் கொலம்பஸ் அமெரிக்காவை கண்டு பிடிக்க முடிந்தது' என்று அட்லாசை ஆதாரம் காட்டுகிறார். ஆசிரியர்கள் அவரவர் கடமையைச் செய்கின்றனர். ஆனால்...

மாணவன் யார் சொன்னதை நம்புவான்? புராணத்தை நம்புவானா? அட்லாசை நம்புவானா? இதில் எதைக் கொண்டு அவன் ஆராய்ச்சிசெய்ய முடியும்? ஆகவே அறிவுக்கு எட்டாததை, ஆதாரத்துக்கு அப்பாற்பட்டதை, பகுத்தறிவுக்கு ஒவ்வாததை ஒதுக்கியதாக இருக்கவேண்டும் கல்வித்திட்டம்.

அரசியல் சுதந்தரம், பொருளாதார சமத்துவம், சமூகசகோதரத்துவம் கொண்ட சமுதாயத்தை உருவாக்கக் கூடியதாக இருக்கவேண்டும் தற்காலத்திய கல்வித்திட்டம்.

மக்களை மக்களாக வாழச்செய்யும் இத்தகைய கல்வியைப் பரப்ப கிராமந் தவறாமல் ஆரம்பப் பள்ளிகளை அமைக்க வேண்டும். ஆரம்பக் கல்வி கட்டாயக் கல்வியாகவும், இலவசக் கல்வியாகவும் இருக்க வேண்டும். ஆரம்பக் கல்விக்குப் பெரும்பாலும் பெண்களையே உபாத்தியாயினிகளாக அமர்த்த வேண்டும். அவர்கள்தான் குழந்தைகளுடன் அதிகமாகப் பழகுபவர்கள். குழந்தைகளின் மனதுக்கேற்ப நடந்து கொள்ளக் கூடிய ஆற்றல் பெண்களுக்குத்தான் உண்டு.

அடுத்தபடியாக முதியோர் கல்வித் திட்டம் மிகமிக முக்கியமானது. முதியவர்களுக்கு இரவு நேரங்களில் ஒரு குறிப்பிட்ட நேரத்தைக் குறித்துக் கொண்டு அதன்படி அவர்களுக்குக் கல்வியைப் புகட்டலாம். அவர்களுக்கு எழுத்துச் சொல்லிக் கொடுப்பதுடன், அவர்களின் வாழ்க்கைத் தொழிலுக்குகந்த கல்வித் திட்டமும் சேர்த்துக் கற்பிக்கப்பட வேண்டும்.

முதியோர் கல்வியைப் பரப்ப ஒவ்வொரு படித்த மாணவனும் முன்வர வேண்டும். இல்லாவிட்டால் அரசாங்கம் அவர்களை முன்வரச்செய்ய வேண்டும். உதாரணமாக கல்லூரிப் படிப்பை முடித்த மாணவர்கள் ஒரு வருடம் முதியோர் கல்வியைப் பரப்ப பாடுபடவேண்டும். அப்படி முதியோர் கல்விக்காகப் பாடுபட்ட மாணவர்களுக்குத்தான் அரசாங்க உத்தியோகம் அளிக்கப்படும் என்று திட்டவட்டமாகக் கூறிவிட வேண்டும் அரசாங்கம்.

மாணவன் பாடுபட்டதற்குப் பலன் ஏற்பட்டிருக்கிறதா என்று பரீட்சை செய்து பார்க்க வேண்டும். இல்லாவிடில் "காடாறுமாதம் நாடாறுமாதம்" என்பதுபோல் கிராமத்தில் ஆறு மாதம் நகரத்தில் ஆறுமாதம் என்று நாளைக் கணக்குச் செய்துவிடுவார்கள். ஆகவே அந்தந்த வட்டாரங்களில் உள்ள உத்தியோகஸ்தர்கள் முதியோர் கல்வித்திட்டம் சரிவர நடத்தப்படுகிறதா என்று கவனித்து வரவேண்டும்.

ஆகவே கிராமந் தவறாமல் ஆரம்பக் கட்டாய இலவசக் கல்வியும், அய்ந்து மைலுக்கொரு நடுத்தரப் பள்ளியும், பத்து மைலுக்கொரு உயர்நிலைப் பள்ளியும், தாலுக்காவிற்கொரு கல்லூரியும், ஜில்லாவுக்கொரு பல்கலைக்கழகமும் அமைத்தல் வேண்டும்.

அங்கேயே ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டப்படல்வேண்டும். ஆசிரியர்களின் ஒத்துழைப்பு இல்லாவிடில் எத்தகைய சிறந்த கல்வித் திட்டமாய் இருந்தாலும் அது பயன் அளிக்காது. ஆகவே ஆசிரியர்களுக்குப் போதிய ஊதியமும் வசதியும் செய்துகொடுக்கப்படல் வேண்டும். இக்காலத்தில் ஆசிரியர் தொழில் என்றால் அருவருக்கத்தக்க நிலையில் உள்ளது. இத்தகைய இழிநிலை மாற்றி அமைக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு பள்ளியும் ஆசிரியரின் அன்பைப் பெற்றதாக அமைய வேண்டும்.

இத்தகைய கல்விக் கூடங்களை அரசாங்கமே ஏற்று நடத்த முன்வரவேண்டும். அப்பொழுதுதான் ஒரே வித இலட்சியத்தைப் புகுத்தமுடியும். தனிப்பட்ட நபர்கள் நடத்தும் பள்ளிகளுக்கு அரசாங்கம் உதவித் தொகை கொடுப்பதை உதறித் தள்ளிவிட்டுத் தானே ஏற்று நடத்தவேண்டும்.

இத்தகைய சிறந்த லட்சியத்தைக் கொண்ட ஒரு பள்ளியில் S. S. L. C.

யை முடித்துக்கொண்டு வெளியேறும் ஒரு மாணவன் தாய்மொழிப் புலமை படைத்தவனாகவும், தான் ஒரு உலகப் பொதுமகன் என்ற உயர்ந்த எண்ணங்களைக் கொண்டவனாகவும் திகழ்தல் வேண்டும். அதுதான் காலத்திற்கேற்ற கல்வித் திட்டத்தின் பெருமை.

இத்தகைய கல்வித் திட்டத்துக்குப் போதிய பொருள் இல்லையென்று கூறலாம். கல்விக்குதவாத செல்வம் எந்த மூலையிலும் தேவைக்கு மிஞ்சித் தேங்கிக்கிடக்க அனுமதிக்கக்கூடாது.

அரசாங்க வருவாயை அதிகரிக்கச் செய்ய வேண்டும். வருவாயை அதிகரிக்கச் செய்ய வழிகள் பலஉண்டு. பொருளாதார நிபுணர்களைக் கொண்டு ஏழைகளைப் பாதிக்கக் கூடாத முறையில் வரிகளை உயர்த்தலாம்.

ஐய்ரோப்பிய நாடுகளில் அறிவு வளர ஆரம்பித்த காலம் 16-ம் நூற்றாண்டின் முற்பகுதி. இந்த 20-ம் நூற்றாண்டில் நம் நாட்டில் அறிவுப் பசி எடுக்க ஆரம்பித்துவிட்டது. துவக்கக் கல்வி பெறவேண்டியவர்களின் எண்ணிக்கை 70 லட்சம் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது கிட்டதட்ட ⅛ பங்கு மாணவர்கள் தான் படிக்கின்றனர். நாமும் மூன்று அய்ந்தாண்டுத் திட்டங்கள் வகுத்து முழு மூச்சுடன் முயன்றால் முழு வெற்றியடையலாம். உலகிலேயே தலை சிறந்த நாடாக நம் நாட்டை ஆக்கலாம்.

முயன்றால் முடியும்! முயல்வோமா?

—பரசுராம்.

---

(1ம் பக்கத்தொடர்ச்சி)

கொள்ள முடியுமா? சொல்லுபார்ப்போம்?

பார்ப்பனீயம் இத்தனை காலமாய் நமது நாட்டில் இருப்பதற்கு காரணமே இது தானே. எதை எடுத்தாலும் உனக்கு 'தெரியாது, உன் கண்களுக்குப்படாது, உன் புத்திக்கும் மனதுக்கும் எட்டாது, நீ அதைப் படிக்க அருகனல்ல, யுக்தி வாதங்களால் தர்க்கம் பண்ணுவது நாஸ்திகம், சூக்ஷ்மசரீரம், இதெல்லாம் சோதனை, சிவன் பார்வதிக்குச் சொன்னார், ராமருக்கு வசிட்டர் சொன்னார், சூதபுராணிகர் நைமிசாரண்ய வாசிகளுக்குச்சொன்னார், சுகர்சொன்னார், ஜனமேஜயர் சொன்னார், பகவான் கீதையில் சொன்னார்' என்றே சொல்லுவார்கள். 'யார் சொன்னார்? எப்பொழுது சொன்னார்? யார் ஒண்டிக் கேட்டுக் கொண்டிருந்தது? 'உனக்கு எப்படித் தெரியும்? என்று கேட்டால், அது நாஸ்தீகம் என்று சொல்லி விடுகிறான். நீயோ நாஸ்தீகம் என்றால் நடுங்கி விடுகின்றாய். பிறகு எப்படி நீ அவனை ஜெயிக்க முடியுமென்று சொல்லுபார்ப்போம்.

காக்கை:-ஆமாப்பா நீ சொல்லுவதெல்லாம் சரியாய்த்தான் இருக்கின்றது. மனுஷனைக் குண்டா முண்டா கட்டிப்போட்டு விடுகின்றான். ஒன்றையாவது யோசித்துப் பார்ப்பதற்கு இடம் கொடுப்பதில்லை. ஆனாலும் பார்ப்பனர்கள் புத்திசாலிகள்தான், அதில் சந்தேகமில்லை.

குருவி:-அவர்களைப் புத்திசாலிகள் என்றால் நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். தந்திர சாலிகள் என்று வேண்டுமானால் சொல்லிக் கொள்.

காக்கை:-ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? அவர்கள் புத்திசாலித்தனம் உனக்கு விளங்க வில்லையா?

குருவி:-அவர்கள் புத்திசாலிகளா என்கின்றவிஷயத்தைச்சற்று கவனித்துப்பார். நீ எந்தப் புராணத்தையோ, சாஸ்திரத்தையோ, வேதத்தையோ வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு நன்றாய் ஆராய்ச்சி செய்துபார். இமயமலைக்கு அப்புறம் அவர்கள் ஒன்றுகூடத் தெரிந்து கொண்டிருப்பதாய்க்காணமுடியாது. அது மாத்திர மல்லாமல் பார்ப்பானுக்கு கைலாயமே இமயமலை தானே. அது பனிக்கட்டியில் மூடியிருப்பதால் அதை வெள்ளிபங்கிரி என்று சொல்லிவிட்டான். அந்தக்காலத்தில் அங்கு யாரும் போகமுடியாமல் இருந்ததால் சிவன் அங்கு தான் இருந்தான், உமை அந்த மலைக்குத்தான் பிறந்தாள், பிர்மா அங்குதான், ரிஷிகள் அங்குதான், தேவர்கள் அங்கு தான், சுவர்க்கம் அங்குதான்' என்று எல்லாவற்றையும் அந்த மலையின் தலையிலேயே போட்டு விட்டான்.

அதுமாத்திரமா? நதியைப் பார்த்தால் அது ஒரு தேவதை, சமுத்திரத்தைப் பார்த்தால் அது ஒரு தேவதை, மழை பெய்தால் அது ஒரு தேவதை, காற்றடித்தால் அது ஒரு தேவதை, நெருப்பெரிந்தால் அது ஒரு தேவதை, சூரியன் ஒரு தேவதை, சந்திரன் ஒரு தேவதை, நட்சத்திரம் ஒவ்வொன்றும் தனித்தனி தேவதை, இதுபோலவே அந்தப் பயல்களுக்கு (சையன்ஸ்) விஞ்ஞான சாஸ்திரம் தெரியாததால் தொட்டதெல்லாம் தேவதை தேவதை என்று பேர் வைத்து, ஒவ்வொன்றின் பேராலும் நம்ம தலையில் கையைவைத்து, கொள்ளையடிக்க சவுகரியம் செய்து கொண்டான். அவன் முட்டாள்தனமும் அவனுக்கு உதவியாக இருக்கின்றது. ஆனால் நம்முடைய அறிவோ நமக்கு நாஸ்தீகமாயும் எமனாகவும் இருக்கின்றது.

இதெல்லாம் கிடக்க, உன் தலையில் கையை வைத்திருப்பது உனக்குத் தெரியுமா? ஓ காக்கையே! நீ ஒரு காலத்தில் சீதையினுடைய முலைக்காம்பைக் கொத்திவிட்டாயாம். சீதையின் புருஷனாகிய இராமன் உன் கண் விழிகளில் ஒன்றைப் பிடுங்கிவிட்டானாம். அதனால் நீ ஒற்றைக் கண் குருடாய் இருக்கிறாயாம். இந்தப்படி எழுதி வைத்திருக்கிறான் உன் பேரில் அவர்களுக்கு இருந்த கோபத்தினால். பெண்களிடம் கூட மரியாதை இல்லாமல் சீதை, ஒரு காக்கை வந்து கொத்தும்படி அவ்வளவு மெய்ம்மறந்து தனது மார்பைக் காட்டிக் கொண்டு படுத்திருந்தாள் என்று எழுதியிருக்கின்றான். எனவே அவர்கள் சங்கதி சுலபத்தில் சரிப்படுத்தக் கூடியதல்ல.

காக்கை:—நேரமாகி விட்டது. சாவகாசமாய் பேசிக் கொள்ளலாம்.

குருவி:-சரி போய்வருகிறாயா.

---


புதிய வெளியீடு!

விற்பனைக்குத் தயார் !!

சொற்பப்பிரதிகளே கைவசமுள்ளன !

பெரியாரவர்கள் எழுதிய 'திருக்குறளும் திராவிடர் கழகமும்' (பெரியாரின் உருவம் அட்டையை அலங்கரிக்கிறது) பக்கங்கள் 34. விலை 0-2-6. தனிப்பிரதி வேண்டுவோர் 0-3-3 ஸ்டாம்பு அனுப்புக. வியாபாரிகளுக்கு 25% கமிஷன் உண்டு.

மானேஜர் "குடி அரசு" ஈரோடு.


அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர் என். கரிவரதசாமி, தமிழன் அச்சகம், 59 கச்சேரி வீதி, ஈரோடு.